Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror
www.tamilmirror.lk
FRIDAY, OCTOBER 04, 2024

வெள்ளிக்கிழமை ஒக்டோபர் 04, 2024 | ஒளி: 10 கதிர்: 065 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE



## சிங்கப்பூர் அமைச்சருக்கு 12 மாத சிறை

முழுச் செய்தி P8

# “அரசியல் பழிவாங்கல் இனிமேல் நடக்காது”

**எதிர்கால நடவடிக்கைகள் குறித்து ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க விரிவாக கலந்துரையாடினார்**

**அரச ஊழியர்கள் தமது பொறுப்புக்களை உரிய முறையில் நிறைவேற்றுவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்**

வினைத்திறன்மிக்க மக்கள் நல அரச சேவையை உருவாக்க அர்ப்பணிக்கும் அரச ஊழியர்களுக்காக நாம் பக்கபலமாக இருப்போம் என்று தெரிவித்துள்ள ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, சம்பிரதாய அரசியல் பழிவாங்கல்கள் இனிமேல் நடக்காது என்றும் உறுதியளித்தார்.

விவசாயம், காணி, கால்நடை, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சராகத் தனது கடமைகளை, வியாழக்கிழமை (03) பொறுப்பேற்ற பின்னரே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வினைத்திறன்மிக்க மக்கள்நல அரச சேவையை உருவாக்க தம்மை அர்ப்பணிக்கும் அரச ஊழியர்களுக்காகத் தாம் துணை நிற்பதாக ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க குறிப்பிட்டார்.

குடிமக்களுக்காகப் பாடுபடும் அரச அதிகாரிகள் அரசியல் பழிவாங்கல்களுக்கு முகம் கொடுக்கும் நிலை இதுவரை காலமும் இருந்தபோதும் அந்த சம்பிரதாயம் இனிமேலும் நடக்காது எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

விவசாய அமைச்சின் தற்போதைய நிலைமை மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, அமைச்சின் செயலாளர்கள் மற்றும் அமைச்சின் உயர் அதிகாரிகளுடன் விரிவாகக் கலந்துரையாடினார். கிராமிய வறுமையை ஒழிப்பதற்காக விவசாய அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ள பங்களிப்பு மகத்தானது எனவும், அரச அதிகாரிகளின் செயற்பாடுகளுக்கு அமைவாகவே வறுமை

தொடர்ச்சி P2



9ஆவது பாராளுமன்றில்

## 241 எம்.பிக்கள் இருந்தனர்

2020 ஒகஸ்ட் 20ஆம் திகதி முதலாவது அமர்வில் ஆரம்பமாகி 2024 செப்டெம்பர் மாதம் 24ஆம் திகதி நள்ளிரவு ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவினால் கலைக்கப்பட்ட ஒன்பதாவது பாராளுமன்றத்தின் காலப் பகுதியில் அரசியலமைப்பின் 66வது உறுப்புரைக்கு அமைய 19 பாராளுமன்ற உறுப்புரிமைகளுக்கான வெற்றிடம் ஏற்பட்டது.

தொடர்ச்சி P2





சிறுவர் தினத்தன்று சிறுவன் கொலை:

## நாலந்தவத்தையில் ஆர்ப்பாட்டம்

சர்வதேச சிறுவர் தினமான, ஒக்டோபர் 1ஆம் திகதியன்று நண்பனின் காதலியைச் சந்திக்கச் சென்ற பாடசாலை மாணவனை, குழுவொன்று கொடூரமாகத் தாக்கி கொலை செய்த சம்பவத்துக்குக் கடுமையான எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

தொடர்ச்சி P2



## இன்று வரும் ஜெய்சங்கர் ஜனாதிபதியை சந்திப்பார்



இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி சுப்பிரமணியம் ஜெய்சங்கர், வெள்ளிக்கிழமை (04) இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார்.

இந்த விஜயத்தின் போது ஜெய்சங்கர், ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க மற்றும் பிரதமர் கலாநிதி ஹரினி அமரசூரிய ஆகியோரை சந்தித்துக் கலந்துரையாட உள்ளார்.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் மற்றும் அவரது குழுவினர் வெளிவிவகார அமைச்சில் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்தை சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர்.

## ரூ.1 கோடி கொள்ளை; யாழில் இருவர் கைது

**எம்.றொசாந்த்,**

யாழ்ப்பாணத்தில் தனது காணியை விற்ற பணம் ஒரு கோடியே 5 இலட்ச ரூபாய் பணத்துடன் வீடு திரும்பிக்கொண்டிருந்த நபரைத் தாக்கி விட்டு பணத்தை இருவர் கொள்ளையடித்துச் சென்ற குற்றச்சாட்டில் இரு சந்தேகநபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.


தொடர்ச்சி P2



## ஜனாதிபதி தயங்குவது ஏன்?

**உண்மையை ஏற்றுக் கொண்டால் தமிழர்களுக்கு எப்படியான தீர்வை வழங்க தயாராக இருக்கின்றீர்கள் என்ற வெளிப்படுத்தல் அவசியம்.**

**நிதர்ஷன் வினோத்**



தமிழர்களுக்கு எத்தகைய தீர்வை வழங்கப் போகிறார் என்பதை வெளிப்படையாக அறிவிக்க ஜனாதிபதி தயங்குவது ஏன் என ரெலோ அமைப்பின் யாழ். மாவட்ட அமைப்பாளரும் வடக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினருமான சபா குகதாஸ் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்காவும் அவரது அமைச்சரவையும் நாட்டில் 75 ஆண்டு புரையோடிப் போய் உள்ள தேசிய இனப்பிரச்சினைக்கு எப்படியான பொறிமுறை ரீதியான தீர்வு தங்களால் முன்னெடுக்கப்படும் என்பதை உறுதிப்படத் தெரிவிக்காமல் கடந்த கால ஆட்சியாளர் போன்று அரசியல் பேசுவது தமிழ் மக்களுக்கு ஏமாற்றத்தையே வெளிப்படுத்தியுள்ளது.

தொடர்ச்சி P2

## தொகுதியில் குதிப்பர்

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் 40 தொகுதி அமைப்பாளர்களை இம்முறை பொதுத் தேர்தலில் களமிறக்குவதற்குத் தீர்மானித்துள்ளதாகக் கட்சியின் பிரசாரச் செயலாளர் திசர குணசிங்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவின் தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவளிக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தொகுதி அமைப்பாளர்கள் சிலர் தீர்மானித்துள்ளதாகக் கட்சியின் உப தவிசாளர் சட்டத்தரணி கீர்த்தி உடவத்த கூறியுள்ளார்.

தொடர்ச்சி P2

## பொதுத் தேர்தலுக்குப் பின் உள்ளூராட்சி தேர்தல்

பிற்போடப்பட்ட 2023 உள்ளூராட்சி சபைத் தேர்தலை, எதிர்வரும் பொதுத் தேர்தலுக்குப் பின்னர் விரைவில் நடத்துவதற்கு ஆயத்தமாகியுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## “பிரச்சினைகளை தீர்ப்பதே நோக்கம்”



ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட்டு ஒரு கட்சி வெற்றி பெற்று தற்போது பொதுத் தேர்தலுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. ஜனாதிபதித் தேர்தலில் இரண்டாவதாக இடத்துக்கு வந்த ஒரு சக்தியாக எப்பொழுதும் பின்பற்றப்படும் வேலைத்திட்டம்தான் நாட்டை முதன்மைப்படுத்திச் செயற்படுவதாகும். 220 இலட்சம் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வை வழங்குவதற்கு நாம் பலமாக இருக்க வேண்டும்.

தொடர்ச்சி P2

## சபாநாயகரும் போட்டியிடார்

**மக்கள் மத்தியிலே அரசியல் மாற்றம் ஒன்றின் தேவை உணரப்பட்டது. அதன் விளைவுதான் அனுரகுமார திசாநாயக்க ஜனாதிபதியானார்**



அரசியலில் தாம் மிகவும் ஏமாற்றமடைந்துள்ளதாகவும், நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என முன்னாள் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன அறிவித்துள்ளார்.

43 வருடங்களாக அரசியலில் ஈடுபட்டு வருவதாகவும், இந்நிலைமையினால் அரசியலிலிருந்து ஓய்வு பெற்று தனது எதிர்கால வாழ்க்கையை நடத்தவுள்ளதாகவும் மகிந்த யாப்பா கூறியுள்ளார்.

மேலும், தாம் இதுவரை எந்தவொரு தேர்தலிலும் தோற்கடிக்கப்படவில்லை

தொடர்ச்சி P2

## கெஹலியவுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு



முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல மற்றும் அரச அச்சக கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் ஜயம்பதி ஹீன்கெந்த ஆகியோருக்கு எதிராக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை நவம்பர் மாதம் 29ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ள

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# “அரசியல் பழிவாங்கல்...

விவசாய அமைச்சின் தற்போதைய நிலைமை மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, அமைச்சின் செயலாளர்கள் மற்றும் அமைச்சின் உயர் அதிகாரிகளுடன் விரிவாக கலந்துரையாடினார்.

கிராமிய வறுமையை ஒழிப்பதற்காக விவசாய அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ள பங்களிப்பு மகத்தானது எனவும், அரச அதிகாரிகளின் செயற்பாடுகளுக்கு அமைவாகவே வறுமை ஒழிக்கப்படுமா இல்லையா என்பது தீர்மானமாகும் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் புதிய அரசியல் சம்பிரதாயம் மற்றும் பழைய அரசியல் கலாசாரத்திற்கு எதிரான எதிர்ப்பு, பிரஜைகள் எதிர்நோக்கும் பொருளாதாரப் பிரச்சினைகள், அரச சேவையின் செயற்பாடு தொடர்பான பிரஜைகளின் அதிருப்தி போன்றன தாக்கம் செலுத்தியதாகவும் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க சுட்டிக்காட்டினார்.

எனவே, வினைத்திறன் மிக்க மக்கள்நல அரச சேவையை உருவாக்குவதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதாக தெரிவித்த ஜனாதிபதி, பொருளாதார வீழ்ச்சிக்குப் பின்னால் மோசடி மற்றும் ஊழல் இருப்பதாக மக்கள் நம்புவதாகவும், அதனை தடுப்பதற்காகவே இம்முறை மக்கள்ஆணை வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

அரச கட்டமைப்பு முழுவதும் பரவியுள்ள பாரிய மோசடிகள் மற்றும் ஊழலை தடுத்து நிறுத்துவதற்கு மக்கள் வைத்துள்ள நம்பிக்கையை காப்பாற்றுவதாகவும், அரச ஊழியர்கள் தமது பொறுப்புக்களை உரிய முறையில் நிறைவேற்றுவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டுமெனவும் அரச ஊழியர்களிடம் ஜனாதிபதி கேட்டுக்கொண்டார்.

பிரஜைகளை திருப்திப்படுத்தும் வகையில் வினைத்திறன் மற்றும் செயற்திறன் மிக்க அரச சேவையை உருவாக்க தற்போதைய அரச உத்தியோகத்தரின் அர்ப்பணிப்பு அவசியமானது எனவும் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க குறிப்பிட்டார்.

அரச சேவையில் இதுகாலவரை இடம்பெற்று வந்த அரசியல் பழிவாங்கல், இடமாற்றம், அரச சேவையில் பதவி உயர்வு வழங்காமை போன்ற செயற்பாடுகள் தமது அரசாங்கத்தின் கீழ் இடம்பெறாது என வலியுறுத்திய ஜனாதிபதி, மக்களை திருப்திப்படுத்தும் வினைத்திறன்மிக்க அரச சேவையை உருவாக்குவதற்கு அரச உத்தியோகத்தர்கள் செயற்பட வேண்டுமெனவும் குறிப்பிட்டார்.

எதிர்வரும் நாற்பது நாட்கள் நிலைமாற்ற காலமாகும் எனவும், அந்த காலப்பகுதியில் அரச சேவையை வீழ்ச்சியடையாமல் பேணுவதற்கு அரச உத்தியோகத்தர் பாடுபட வேண்டும் எனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

அடுத்த பொதுத் தேர்தலின் பின்னர் இந்த அமைச்சுக்களுக்கு புதிய அமைச்சர்கள் நியமிக்கப்படுவார்கள் என்றும் ஜனாதிபதி சூசகமாக தெரிவித்தார்.

முன்பிருந்த அரச தலைவர்கள், அரச அதிகாரிகளை ஊடகங்களுக்கு முன்பாக கேள்வி எழுப்பியது போன்று தான் ஊடகங்களுக்கு முன்னால் அரச அதிகாரிகளை கேள்வி கேட்கப் போவதில்லை எனவும், இவ்வாறான ஊடகக் கண்காட்சிகளை தான் ஏற்கவில்லை எனவும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மேலும் தெரிவித்தார். அரசு ஊழியரின் கண்ணியத்தைப் பாதுகாத்து குடிமக்கள் திருப்தியடையும் அரச சேவையை உருவாக்க தான் எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டார்.

# தொகுதியில் குதிப்பர்

ஜனாதிபதித் தேர்தலின் போது ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டிற்கமைய ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் இணைந்து பொதுத் தேர்தலில் போட்டியிடவுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பிரசாரச் செயலாளர் திசர குணசிங்க குறிப்பிட்டார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் ஒவ்வொரு மாவட்டத்திலும் 2பேர் இம்முறை தேர்தலில் போட்டியிடவுள்ளதாகவும் இளம் சமுதாயத்தின் பிரதிநிதித்துவத்துக்கு முன்னுரிமை அளித்து அதற்கான பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

# கெஹலியவுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கு வியாழக்கிழமை (03) கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சுஜீவ நிஷங்க முன்னிலையில் அழைக்கப்பட்டிருந்தது.

இதன்போது முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல நீதிமன்றத்தில் ஆஜரானதோடு குறித்த வழக்கை ஏற்கனவே திட்டமிட்டபடி நவம்பர் மாதம் 29-ம் திகதி விசாரிக்க கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டார்.

ஊடகத்துறை அமைச்சராக இருந்த காலத்தில் தமது தனிப்பட்ட கையடக்கத் தொலைபேசி கட்டணத்திற்காகச் செலுத்தப்பட வேண்டிய 240,000 ரூபாயை அரச அச்சக கூட்டுத்தாபனத்தின் நிதியைப் பயன்படுத்திச் செலுத்தியமை ஊடாக அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்படுத்தியதாகக் குற்றம்சாட்டி முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல மற்றும் அரச அச்சக கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் ஜயம்பதி ஹீன்கெந்த ஆகியோருக்கு எதிராக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவினால் இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நாலந்தவத்தையில் ஆர்ப்பாட்டம்

மாத்தளை, நாலந்தவத்தை பிரதேச வாசிகளும் உயிரிழந்த மாணவன் கல்வி கற்ற பாடசாலையின் மாணவர்களும் வியாழக்கிழமை (03) அன்று பாடசாலைக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

உயிரிழந்த பாடசாலை மாணவனின் வீட்டிலிருந்து கண்டி - யாழ்ப்பாணம் ஏ-9 வீதியூடாக 5 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள கலைமகள் பாடசாலைக்குப் பேரணியாக வந்தவர்கள், சுமார் ஒரு மணி நேரம்வரை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தாக்குதலை மேற்கொண்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரியும் மாணவனின் மரணத்திற்கு நீதி வேண்டும் என்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள் உட்பட 500க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தாக்குதலுக்கு உள்ளான, மடவளை, உல்பத்த, நாளந்த தோட்டத்தைச் சேர்ந்த கவுடுபெலெல்ல கலைமகள் வித்தியாலயத்தில் கல்வி கற்கும் 17 வயதுடைய மோகன் யுகேஷ் என்ற மாணவனே உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவம் தொடர்பில், மாணவியின் தந்தை கைது செய்யப்பட்டு விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# ரூ.1 கோடி கொள்ளை; யாழில் இருவர் கைது

சங்குவேலி பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர், தற்போது வெளிநாட்டில் வசித்து வரும் நிலையில், அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்தார். அவர் புதன்கிழமை (02) தனது காணியை விற்ற பணத்துடன் வீடு திரும்பிக்கொண்டிருந்தார்.

அப்போது மோட்டார் சைக்கிள் ஒன்றில் பின்தொடர்ந்து வந்த இருவர் அவரை வீதியில் வழிமறித்து அவரை தாக்கி விட்டு பணம் , கடவுச்சீட்டு , இலட்ச ரூபாய் பெறுமதியான கையடக்க தொலைபேசி என்பவற்றைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

பணத்தினை பறிகொடுத்தவர், மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்த நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

அதன் அடிப்படையில், சந்தேகநபர்கள் ஊரெழு பகுதியில் மறைந்திருப்பதாக பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் , சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் இருவரைக் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து கொள்ளையடிக்கப்பட்ட பணம் , கையடக்க தொலைபேசி உள்ளிட்டவற்றையும் மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரையும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ள பொலிஸார் இருவரையும் மல்லாகம் நீதவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# “சங்கு எங்கள் சின்னம்”

எஸ்.நிதர்ஷன்

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணிக்குத் தேர்தல் திணைக்களத்தால் தற்போது சங்குச் சின்னம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்கமைய வடக்கு கிழக்கு முழுவதும் கூட்டணியாகச் சங்குச் சின்னத்தில் போட்டியிட உள்ளோம். அதேநேரத்தில், கொழும்பிலும் இம்முறை போட்டியிடுவது தொடர்பிலும் ஆராய்ந்து வருகிறோம் என ஈ.பி. ஆர்.எல்.எப். அமைப்பின் தலைவரும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் ஊடகப் பேச்சாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

யாழில் வியாழக்கிழமை(03) நடத்திய ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியானது பதிவு செய்யப்பட்ட ஒரு கட்சியாக இருக்கிறது. கடந்த உள்ளூராட்சி சபை தேர்தல் அறிவிக்கப்பட்ட போதும் நாம் அதில் போட்டியிடுவதற்கு வேட்புமனுவையும் தாக்கல் செய்திருந்தோம். இக் கூட்டணியின் சின்னமாக குத்துவிக்கு இருந்த்து என்றார்.

# 241 எம்.பிக்கள் இருந்தனர்

இதற்காக 18 சந்தர்ப்பங்களில் 16 பேர் பாராளுமன்ற உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர். இதற்கு அமைய 241 உறுப்பினர்கள் பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தினர்.

தேசியப் பட்டியலில் பாராளுமன்றத்திற்குத் தெரிவுசெய்யப்பட்ட ஜயந்த கெட்டகொட இராஜினாமாச் செய்ததுடன், இவருக்குப் பதிலாக பசில் ராஜபக்ஷ நியமிக்கப்பட்டார்.

தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் நிவாட் கப்ரால் இராஜினாமாச் செய்ததையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கு ஜயந்த கெட்டகொட மீண்டும் நியமிக்கப்பட்டார். இதேபோன்று, முஜிபுர் ரஹ்மான் இராஜினாமாச் செய்ததைத் தொடர்ந்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கு ஏ.எச்.எம்.பௌசி நியமிக்கப்பட்டார்.

அதனைத் தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினர் டயானா கமகே நீதிமன்ற உத்தரவின் பெயரில் உறுப்புரிமையை இழந்தமையால் ஏற்பட்ட வெற்றிடத்திற்கு முஜிபுர் ரஹ்மான் மீண்டும் நியமிக்கப்பட்டார். எனினும், ஹரீன் பெர்னான்டோவின் வெற்றிடத்திற்கு புதிய பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் நியமிக்கப்படவில்லை.

மிகவும் தனித்துவமான நிகழ்வுகளால் மக்களின் கவனத்தை ஈர்த்திருந்த ஒன்பதாவது பாராளுமன்றத்தில் இடம்பெற்ற முக்கியமான நிகழ்வாக இந்நாட்டின் 7வது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியான கோட்டாபய ராஜபக்ஷ தனது பதவியை இராஜினாமாச் செய்ததுடன், 8வது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்க பாராளுமன்ற உறுப்பினர்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டமையாகும். இதற்கமைய பாராளுமன்ற உறுப்பினராக இருந்த ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதிப் பதவிக்கு நியமிக்கப்பட்டதும் அவருடைய பாராளுமன்ற உறுப்பினர் வெற்றிடத்துக்குப் புதிய உறுப்பினராக வஜிர அபேவர்தன நியமிக்கப்பட்டமை உள்ளடங்கலாக 16 பேர் புதிய பாராளுமன்ற உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர்.

அத்துடன், ஒன்பதாவது பாராளுமன்றத்தில் கூட்டத்தொடர்கள் நான்கு தடவைகள் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. இதில் இரண்டு தடவைகள் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் பாராளுமன்றக் கூட்டத்தொடர்கள் முடிவுக்குகொண்டுவரப்பட்டது.

மூன்றாவது மற்றும் நான்காவது தடவைகள் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் மேற்கொள்ளப்பட்டன.

இதற்கு அமைய ஒன்பதாவது பாராளுமன்றத்தில் 5 கூட்டத்தொடர்கள் காணப்பட்டன.

2020.08.20 முதல் 2021.12.12 வரை முதலாவது கூட்டத்தொடரும்,

2022.01.18 முதல் 2022.07.28 வரை இரண்டாவது கூட்டத்தொடரும்,

2022.08.03 முதல் 2023.01.27 வரை மூன்றாவது மூட்டத்தொடரும்,

2023.02.08 முதல் 2024.01.26 வரை நான்காவது கூட்டத்தொடரும்,

2024.02.07 முதல் 2024.09.24 வரை ஐந்தாவது கூட்டத்தொடரும் நடைமுறையில் இருந்தன.

இந்த ஐந்து கூட்டத்தொடர்களிலுமாக ஒன்பதாவது பாராளுமன்றம் மொத்தம் 390 நாட்கள் கூடியிருந்தன.

# பொதுத் தேர்தலுக்குப் பின்...

பொதுத் தேர்தல்கள் நிறைவடைந்த பின்னர் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான திகதிகள் விரைவில் அறிவிக்கப்படும் என ஆணைக்குழு விடுத்துள்ள விசேட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல்களை நடத்துவதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடு தொடர்பான சட்ட நடவடிக்கைகள் மற்றும் நிதி விவகாரங்கள் தொடர்பில் கலந்துரையாடியதன் பின்னரே தேர்தல்கள் ஆணைக்குழு மேற்கண்டவாறு அறிவித்துள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை சுமுகமாக நடத்துவதை உறுதி செய்வதற்காக முக்கிய பங்குதாரர்களுடன் ஆரம்பக் கலந்துரையாடல்களை நடத்தியுள்ளதாகவும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

“நாங்கள் தேவையான அடிப்படை வேலைகளை முடித்துவிட்டோம், பொதுத் தேர்தலுக்குப் பிறகு உடனடியாக உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவோம்” என்று ஆணைக்குழு மீண்டும் வலியுறுத்தியது.

# சபாநாயகரும் போட்டியிடார்

எனவும் மகிந்த யாப்பா அபேவர்தன மேலும் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடாதிருக்கத் தீர்மானித்துள்ளதாக முன்னாள் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் (Vino Noharathalingam) தெரிவித்துள்ளார்.

இவ் விடயம் தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, “கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தெற்கிலே மக்கள் மத்தியில் குறிப்பாக சிங்கள பெரும்பான்மை மக்கள் மத்தியிலே அரசியல் மாற்றம் ஒன்றின் தேவை உணரப்பட்டது. அதன் விளைவுதான் அனுரகுமார திசாநாயக்க ஜனாதிபதியாக ஆகியமை.

என்னுடையதும் ஏனைய சில முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களதும் போட்டியிடாதிருக்கின்ற முடிவு ஏனையவர்களும் உணர்ந்து முடிவெடுக்க உந்துதலாக அமையும் என கருதுகின்றேன்.

வன்னி மாவட்டத்தில் அரசியல் தெளிவுள்ள, ஆளுமைமிக்க இளம் தலைவர்களை நாடாளுமன்றம் அனுப்ப வேண்டும் என்ற மக்களின், இளைஞர்களின் விருப்பங்கள் நிறைவேற மக்கள் மனதறிந்து எதிர்வரும் பாராளுமன்ற பொதுத் தேர்தலில் போட்டியிடுவதில்லை என முடிவெடுத்துள்ளேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# “பிரச்சினைகளை தீர்ப்பதே நோக்கம்”

கபட, பொறாமை, வெறுப்பு அரசியல் முறைமையிலிருந்து விலகி நாட்டை வங்குரோத்து நிலையிலிருந்து மீட்கும் வேலைத்திட்டத்திற்குச் செல்ல வேண்டும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

**“ இலட்சக்கணக்கானோர் இங்கு வேலை வாய்ப்புகள் இல்லாது இருக்கும் போது, அதிக முதலீடுகளை இங்கு மேற்கொள்ளுமாறு வெளிநாட்டு முதலீட்டாளர்களை, சர்வதேச சமூகத்தினரைக் கேட்டுக் கொள்கிறோம்**

இளைஞர்களுக்குப் பக்க பலத்தை வழங்கி, நாட்டின் அபிவிருத்திக்கு அவர்களை புதிய தொழில்முனைவோராக உருவாக்க வேண்டும். பயன்படுத்தப்பட வேண்டும். பிரச்சினைகளுக்குப் பதில்களும் தீர்வுகளும் வழங்கப்பட வேண்டும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

கொழும்பு கிழக்கு தேர்தல் தொகுதி கட்சி செயற்பாட்டாளர்களுடன் வியாழக்கிழமை (10) இடம்பெற்ற சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

இலட்சக்கணக்கானோர் இங்கு வேலை வாய்ப்புகள் இல்லாது இருக்கும் போது, அதிக முதலீடுகளை இங்கு மேற்கொள்ளுமாறு வெளிநாட்டு முதலீட்டாளர்களை, சர்வதேச சமூகத்தினரைக் கேட்டுக் கொள்கிறோம். அன்னிய நேரடி முதலீடு நாட்டிற்கு வருவதை விரும்புகிறோம். நாட்டில் தகவல் தொழில்நுட்ப பூங்காக்களை உருவாக்கி தகவல் தொழில்நுட்ப ஏற்றுமதியை அதிகரிக்க வேண்டும். உலகிற்கு ஏற்ற கல்வியும் ஸ்மார்ட் கல்வியும் மிக்க குடிமக்களும் உருவாக்கப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்த கையோடு பொதுத் தேர்தல் வரும்போது பொதுத் தேர்தலின் ஊடாக நாட்டு மக்களின் பிரச்சினைகள் மற்றும் சவால்கள் தீர்க்கப்பட வேண்டும். அது வெறுமனே பேச்சுக்கு மட்டுப்படுத்தப்படாமல் களத்தில் யதார்த்தமான ஒன்றாக அமைந்து காணப்பட வேண்டும். நாட்டுக்கு வழங்கப்பட வேண்டிய உகந்த தீர்வுகள் மக்கள் சார்பான தீர்வுகளாக அமைய வேண்டும். மேலும், உள்ளோர் இல்லாதோர் இடைவெளியைப் போக்கக்கூடிய, சொந்தக் காலில் நிற்கக்கூடிய பெருமைக்குரிய தலைமுறையை உருவாக்கி, அனைத்து மக்களையும் உள்வாங்கிய அபிவிருத்தி யுகத்தை உருவாக்கித் தருவோம். இது ஐக்கிய மக்கள் சக்தியின் தொலைநோக்கு எனவும் எதிர்க்கட்சித் தலைவர் இங்கு மேலும் தெரிவித்தார்.

# ஜனாதிபதி தயங்குவது ஏன்?

கடந்த காலத்திலும் புதிய அரசியல் அமைப்பின் மூலம் தமிழர்களுக்குத் தீர்வு வழங்கப்படும் என கூறிய ஆட்சியாளர்கள் தமிழ் மக்களை ஏமாற்றியதுடன் இலங்கைத் தீவின் பாரிய பொருளாதார வீழ்ச்சிக்கும் வெளி நாடுகளின் அதீத தலையீடுகளுக்கும் வழி வகுத்தனர் என்பதனை இலகுவில் மறந்துவிட முடியாது.

இலங்கைத் தீவு முன்னோக்கிப் பயணிக்க வேண்டும் என்றால் மாற்றம் அவசியம் என நீங்கள் உட்பட பலரும் பேசுகின்றனர். அப்படியான சிஸ்டம் சேஞ் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதன் மூலமே நிலையானதாக ஏற்படும். இந்த உண்மையை ஏற்றுக் கொண்டால் தமிழர்களுக்கு எப்படியான தீர்வை வழங்கத் தயாராக இருக்கின்றீர்கள் என்ற வெளிப்படுத்தல் அவசியம்.

எனவே புதிய சமஷ்டி அரசியல் அமைப்பின் மூலமே தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வை வழங்க முடியும் அப்படியான மனோநிலை ஜனாதிபதி அனுரகுமாரவிடம் தெளிவாக இருந்தால் மட்டுமே உண்மையான மாற்றம் வெளிப்படும்.

மாறாக வெறும் வார்த்தைகளாக தந்திரேபாய அரசியலாக இருக்குமாயின் தற்போதைய பழைய அரசியலமைப்பின் சித்தாந்தம் ஆட்சியில் இருக்குமாயின் வெளிநாடுகளின் சதி வலையில் சிக்கிச் சீரழியும் நிலை உருவாகும்.

தமிழர்களை வார்த்தையால் அரவணைப்பது கடினம் என்ற கடந்த கால வரலாற்றை விளங்கி செயலில் காட்டினால் ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரப் பகிர்வுடன் நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல எந்த தடையும் இல்லை என்றார்.

கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள

# “மீனவர்களை விடுவிக்கவும்”





**எஸ்.ஆர்.லெம்பேட்**

எல்லை தாண்டி மீன் பிடித்த குற்றச்சாட்டின் பேரில் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்களை உடனடியாக படகுடன் விடுதலை செய்ய வலியுறுத்தி, ராமேஸ்வரம் விசைப்படகு மீனவர்கள் மற்றும் சிறையில் அடைக்கப்பட்ட மீனவர்களின் குடும்பத்தினர் வியாழக்கிழமை (03) அன்று உண்ணாவிரத ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

ராமநாதபுரம் - ராமேஸ்வரம் மீன் பிடி துறைமுகத்தில் இருந்து கடந்த சனிக்கிழமை (28) அன்று எல்லை தாண்டி மீன் பிடித்து, கைது செய்யப்பட்ட 17 மீனவர்கள் உட்பட முன்னதாக கைது செய்யப்பட்டடு இலங்கை சிறையில் அடைக்கப்பட்ட சுமார் 150க்கும் மேற்பட்ட மீனவர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் எனவும் இலங்கை கடற்படை வசமுள்ள நாகை, புதுக்கோட்டை, ராமநாதபுரம், தூத்துக்குடி உள்ளிட்ட மாவட்டங்களைச் சேர்ந்த 175க்கும் மேற்பட்ட விசைப் படகுகள் மற்றும் நாட்டு படகுகள் உடனடியாக விடுவிக்க வேண்டும் எனவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் வலியுறுத்தியுள்ளனர்.

வயிற்று பிழைப்புக்காக மீன்பிடிக்க சென்ற மீனவர்களை கைது செய்து சிறையில் அடைத்துள்ளமை மிகுந்த வேதனை அளிக்கிறது.

எனவே, இலங்கை சிறையில் உள்ள தங்கள் உறவினர்களை விரைந்து, மீட்டு தாயகம் அழைத்து வருவதற்கு மத்திய, மாநில அரசுகள் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என கண்ணீர் மல்க கோரிக்கை வைத்துள்ளனர்.

மேலும் , குறித்த மீனவர்களை விடுதலை செய்ய வலியுறுத்தி ராமேஸ்வரம் விசைப்படகு மீனவர்கள் வியாழக்கிழமை(03) மூன்றாவது நாளாகவும் தொடர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஊடகவியலாளருக்கு உதவி கோரல்



இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களில் பணியாற்றிய சிரேஷ்ட ஊடகவியலாளரான இந்திக ஸ்ரீ அரவிந்தவின் வலது காலில் ஏற்பட்டுள்ள நோயைக் குணப்படுத்த, பொதுமக்களிடம் இருந்து உதவி கோரப்படுகிறது. நீரிழிவு நோய் காரணமாக அவருடைய வலது காலில் இரண்டு விரல்கள், சத்திர சிகிச்சையின் மூலமாக அகற்றப்பட்டுள்ளன.

அவர், கடந்த ஐந்து மாதங்களாக, வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றுவருகின்றார். அவர், உள்ளூர் மற்றும் வெளிநாட்டு ஊடகங்களில் சுமார் 29 வருடங்கள் சேவையாற்றியுள்ளார். அவர், பரோபகாரிகளிடம் இருந்து உதவியை எதிர்பார்க்கின்றார்.

பணத்தை வைப்பிலிட விரும்புவோர், இந்திக ஸ்ரீ அரவிந்த, சம்பத் வங்கி கெசல்வத்த கிளை: 115157000129 என்ற இலக்கத்துக்கு வைப்பிலிடவும். மேலதிக விபரங்களுக்கு 0777714590 அழைக்கவும்.



## கடலரிப்பை தடுக்கும் பணிகள் மீள ஆரம்பம்

**அஸ்ஹர் இப்றாஹிம்**

சாய்ந்தமருது கடற்கரைப்பிரதேசத்தில், கடலரிப்பை தடுக்கும் நோக்கில், கடலினுள் பாறாங்கற்களை போடும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

அந்த நடவடிக்கைகள் இடைநடுவில், இடை நிறுத்தப்பட்டிருந்தன. எனினும், கரையோர பாதுகாப்பு திணைக்களத்தால் அந்த செயற்பாடுகள் வியாழக்கிழமை (03) முதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடலரிப்பினால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்த பௌஸி விளையாட்டு மைதானம் அமைந்துள்ள பிரதேசத்திலேயே இப் பாறாங்கற்கள் இடும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சிகரெட்டுகளுடன் இருவர் சிக்கினர்

**பாறுக் ஷிஹான்**

வெளிநாட்டு சிகரெட்டுகளை சூட்சுமமான முறையில் முச்சக்கரவண்டி ஒன்றில் கடத்தி வந்த, இருவரை விசேட அதிரடி படையினர், வியாழக்கிழமை (03) கைது செய்துள்ளனர்.

கல்முனை கடற்கரை பள்ளி வீதி ஆட்டோ பசார் சந்தி மற்றும் மருதமுனை ஹாஜியார் வீதியை சேர்ந்த 58,72 வயதுடைய இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதிரடிப் படையினருக்குக் கிடைத்த இரகசிய தகவல் ஒன்றிக்கமைய மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கைன் போது, அம்பாறை மாவட்டம் கல்முனை பிரதான வீதியில் வைத்து சந்தேகத்திற்கிடமான முறையில் பயணித்த முச்சக்கரவண்டியை இடைமறித்து சோதனையிட்டுள்ளதுடன்,

அதிலிருந்து சூட்சுமமான முறையில் கடத்தி வரப்பட்ட பெருந்தொகையான வெளிநாட்டு சிகரெட்டுகள் மீட்கப்பட்டுள்ளது .

கைப்பற்றப்பட்ட சிகரெட்டுகள் கல்முனை பகுதியில் உள்ள பாதணிகள் விற்பனை கடைஒன்றுக்கு கொண்டுச் செல்ல முயன்றதாகத் தெரியவந்துள்ளது.

## 4 வயது சிறுவன் உலக சாதனை

**எப்.முபாரக்**

ஐக்கிய இராச்சியத்தை (UK) தலைமையகமாகக் கொண்ட Worldwide Book of Records நிறுவனத்தினால் உலக சாதனையாளர்களை இனம் காண்பதற்கான போட்டியில், புதிய உலக சாதனையாளராக, குறிஞ்சாக்கேணியைச் சேர்ந்த 4 வயதுடைய நஸ்மி அக்யுளான் பிலால் தன்னை அடையாளப்படுத்திக் கொண்டுள்ளார்.

பத்தின் 100ஆம் அடுக்கு வரை அவற்றின் பெயர்களை ஆங்கிலத்தில் 2 நிமிடம் 12 வினாடிகளில் கூறி இச்சாதனையைப் படைத்துள்ளார்.

இவர், கந்தளாய் வைத்தியசாலையில் பணிபுரியும் இயன் மருத்துவர் (Physiotherapist) நஸார் முஹமட் நஸ்மி மற்றும் கிண்ணியா வைத்தியசாலையில் பணிபுரியும் இயன் மருத்துவர் (Physiotherapist) அஸ்ரப் பாத்திமா பஸீஹா ஆகியோரது மகனாவார்.



## போதைக்கு எதிராக கவனயீர்ப்பு

**பு.கஜிந்தன்**


சர்வதேச நல்லொழுக்க தினமான வியாழக்கிழமை (03) அன்று வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தினரின் ஏற்பாட்டில் போதைக்கு எதிரான கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று சங்கானை பேரின்ப தரிப்பு நிலையத்திற்கு முன்பாக நடைபெற்றது.

சங்கானையில் புதிதாக ஒரு மதுபானசாலை அமைப்பதற்கு அனுமதி கோரப்பட்டுள்ள நிலையில் குறித்த மதுபானசாலை அமைக்கவுள்ள இடத்திற்கு அருகாமையில் பாடசாலைகள், கல்வி நிலையங்கள், மத ஸ்தலங்கள், குடிமனைகள் காணப்படுகின்றமையால் மதுபானசாலைக்கு அனுமதி வழங்க வேண்டாம் என வலியுறுத்தி இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தின் முடிவில் சங்கானை பிரதேச செயலாளர் கவிதா உதயகுமார் ஊடாக ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டுள்ளது.

















## தீமிதிப்பு...

**வி.ரி.சகாதேவராஜா**

வரலாற்று பிரசித்தி பெற்ற சம்மாந்துறை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த தீ மிதிப்பு வியாழக்கிழமை(03) காலை நடைபெற்றது.













# கொடிகள் இல்லாத நாடுகள் பட்டினியால் சாக வேண்டும்

மத்திய கிழக்கு நாடுகள் மட்டுமன்றி, சர்வதேசத்திலும் ஒருவகையான பதற்றமான நிலைமையே காணப்படுகின்றது. அந்தளவுக்கு யுத்த மேகம், கருக்கட்டிக்கொண்டிருக்கின்றது. உக்ரேனுக்கு எதிராக ரஷ்யா தாக்குதல்களை ஆரம்பித்த பின்னர், அந்த அச்சம் மூண்டது. இஸ்ரேல் மீதான ஈரானின் தாக்குதல்களை அடுத்து, தற்போது அந்த அச்ச நிலைமை கொஞ்சம் கொஞ்சமாக அதிகரித்துக் கொண்டே செல்கின்றது.

இஸ்ரேல் மீதான ஏவுகணை தாக்குதலை ஈரான் செவ்வாய்க்கிழமை (01) நள்ளிரவில் தொடங்கியது. இதில், ஈரான் உண்மையான சேதத்தைச் செய்ய விரும்பியது, இஸ்ரேலின் பதில், கடந்த முறை போல் கட்டுப்படுத்தப்படாமல் இருக்கலாம் என சர்வதேச செய்திகள் தலைப்பிட்டுள்ளன.

பாலஸ்தீனத்தின் காசா, லெபனான் மீதான தாக்குதல்கள், ஹிஸ்புல்லா தலைவர்கள் படுகொலை உள்ளிட்ட நிகழ்வுகளுக்குப் பதிலடி கொடுக்கும் வகையிலேயே இந்தத் தாக்குதல்கள் ஈரானால் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் அச்செய்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

பேலிஸ்டிக் ஏவுகணைகளைப் பயன்படுத்தித் தாக்குதல் நடத்தியதை ஈரான் உறுதிப்படுத்தியுள்ளது. இஸ்ரேல் பதில் தாக்குதலில் ஈடுபட்டால் மேலும் தாக்குதல் தொடுப்போம் என்று ஈரான் மிரட்டல் விடுத்துள்ளது. இது ஈரான் புரட்சிகர காவல் படையின் முதல் தாக்குதல் என்று ஈரான் பாராளுமன்றத்தின் தேசியப் பாதுகாப்பு மற்றும் வெளியுறவு குழு தலைவர் இப்ராகிம் அஸிஸி தெரிவித்துள்ளார்.

“இஸ்ரேலின் இராணுவ மையங்கள் மற்றும் தளவாடங்களே எங்கள் இலக்காக இருந்தன. கணிப்புகள் ஒருவேளை தவறானால் பொதுமக்களும் கூட பாதிப்புகளை சந்திக்கும் நிலையும் வரலாம். இஸ்ரேல் மீண்டும் தவறிழைத்தால், அடுத்தக்கட்டமாக இரண்டாவதாக நடத்தப்படும் தாக்குதல் பேரழிவை ஏற்படுத்துவதாக இருக்கும்” என்று அவர் கூறியிருந்தார்.

இதனிடையே, ஈரானில் வாழும் இலங்கை பிரஜைகளுக்கு எவ்விதமான பாதிப்புகளும் இல்லையென, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது. அத்துடன், ஈரானுக்கு பயணம் மேற்கொள்வதை தவிர்க்குமாறு இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் இந்தியர்களுக்கு அறிவித்துள்ளது. இதேபோல, ஏனைய நாடுகளும் தங்களுடைய பிரஜைகளுக்கு அறிவுறுத்தல்களை விடுத்திருக்கலாம்.

எதிர்பார்க்கப்பட்ட படியே இஸ்ரேல் மீது ஈரான் தாக்குதல் நடத்தியுள்ள நிலையில், இஸ்ரேல் இனி என்ன செய்யப் போகிறது? மத்திய கிழக்கில் நிலை கொண்டுள்ள அமெரிக்க இராணுவம் என்ன செய்கிறது? மத்திய கிழக்கு பிராந்தியத்தில் அதிகரிக்கும் பதற்றம் உலகளாவிய அளவில், குறிப்பாக கச்சா எண்ணெய் வர்த்தகத்தில் ஏற்படுத்தியுள்ள தாக்கம் என்ன? உள்ளிட்ட விடயங்கள் கேள்வியை ஏற்படுத்தியுள்ளன.

இதற்கிடையே, ஈரானின் இந்த தாக்குதல்களை அடுத்து கச்சா எண்ணெய்யின் விலையும் திடீரென அதிகரித்துள்ளது. இது, எரிபொருட்களைக் கொள்வனவு செய்யும் நாடுகளின் மீது பொருளாதார ரீதியில் கடுமையான தாக்கத்தைச் செலுத்தும், அந்தந்த நாடுகளில் பொருட்களின் விலைகள் அதிகரிக்கும். சாதாரண மக்கள் பெரும் சிரமத்துக்கு உள்ளாகுவார்கள். ஒருசில நாடுகள் மீண்டும் கடன் கேட்டு கையேந்த வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை ஏற்படும்.

பொதுவாகக் கருதுவதாயின், ஹிஸ்புல்லாஹ் போரிலிருந்து விலக வேண்டும். இல்லையெனில் இஸ்ரேல் லெபனானை தரைமட்டமாக்கும், ஈரானின் ஒரு பகுதியையும் தரைமட்டமாக்கும். உலகப்போர் ஏற்படும் அபாயம் எப்போதும் உண்டு. அப்படி நடந்தால் நம்மைப் போன்ற கொடிகள் இல்லாத நாடுகள் பட்டினியால் சாக வேண்டியிருக்கும் என்பதே எமது அவதானிப்பாகும்.




## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன், உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

நான், உறங்க விரும்புகின்றேன். நெஞ்சத்தின் எண்ணங்களை நிறுத்திவிட்டு, ஓயாமல் உட்புகும் மாசுகளைத் துடைத்தெறிந்து, புது நிலைக்குக் கொண்டுவந்தால்தான் நிம்மதி.

நிர்மலமான நிலை எளிதல்ல! ஆனால், அதை அடைந்தேயாகவேண்டும். சொந்தப் பிரச்சினைகள் எதுவும் கிடையாது. ஆயினும், உலகப் போக்கை உணராது எப்படி இருப்பது?

சுற்றியிருக்கும் மக்களை, ஜீவராசிகள் படும் அவஸ்தைகளைக் கண்டும் கேட்டும் மௌனமாக இருக்க முடியுமா? ஏகாந்த நிலையில், சரீரம் வானில் பறந்து செல்வது போலிருக்கும். ஆயினும், சின்னத் துயர் மோதினால், மனம் மீண்டும் உலகுக்குள் பிரவேசித்துவிடுகின்றது.

நிர்மலமான நிகழ்வைச் சிருஷ்டிக்க, அகமும் புறமும் மௌனமாக நிர்ச் சிந்தனைக்குள் ஆட்பட்டேயாகவேண்டும். பாரங்களை உடைத்தெறிந்து, ஆன்மாவுக்கும் தேகத்துக்கும் நிம்மதியை வழங்க வேண்டுமல்லவா?

மன ஒடுக்கம், தியானம், அகத்தின் மீதான நம்பிக்கை, சுடராக எழவேண்டும். எம்மால் எதுவும் முடியும்; தெளவான ஞானத்தைத் தேடுக.

நன்றி– பருத்தியூர் பால. வயிரவநாதன்

போரின் முடிவின் 15 ஆண்டுகளின் பின் – 20

# சமாதானத்திற்கான போரரசியல் - 4



தெ.ஞாலசீர்த்தி மீநிலங்கோ

1994-1995இல் ஆரம்பிக்கப்பட்ட பேச்சுவார்த்தை முயற்சிகள் குமாரதுங்கவின் அரசியல் முன்னேற்றமாகக் கருதப்படலாம்.

புலிகளுடனான பகைமையை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான உறுதிப்பாட்டைத் தற்காலிகமாகப் பாதுகாப்பதன் மூலம், குமாரதுங்க தனது விமர்சகர்களை மௌனமாக்குவதற்குத் தனது அரசியல் மூலதனத்தைத் திரட்டிக் கொள்ள முடிந்தது.

குமாரதுங்க, புலிகளின் ஆத்திரமூட்டலின் கீழ், தனது சமாதான சார்பு அரசியல் பிரசாரத்தில் உறுதியாக இருந்தார். ஆனால், தொடர்ச்சியாக அதைச் சீரழிப்பதற்கான நடவடிக்கைகளில் புலிகளும் எதிர்க்கட்சியினரும் ஈடுபட்டனர். இதனால் அவர் அமைதிக்கு மாற்றான ஒரு தீர்க்கமான இராணுவப் பிரசாரத்தில் இறங்கினார். அவரது தலைமையின் கீழ், அரசாங்கப் படைகள் போர்க்களத்தில் ஏராளமான ‘அரசியல் மதிப்புமிக்க’ இராணுவ வெற்றிகளைப் பெற்றன. அரச மற்றும் தனியார் ஊடகங்களைப் பயன்படுத்துவதன் மூலம், இராணுவப் போர்க்களத்திற்கு வெளியே தென்பகுதியில் பெரும்பான்மையாக வாழும் பெரும்பான்மை சிங்கள மக்களுக்கு இந்த வெற்றிகரமான அனுபவங்களைக் கொண்டு வருவதன் மூலம் அரசாங்கம் இந்த இராணுவ வெற்றிகளைப் பயன்படுத்திக் கொள்ள முடிந்தது.

இந்த நேரத்தில், ஐ.தே.க.- ஸ்ரீ.ல.சு.க. அரசியல் போட்டியின் வெளிப்படையான வெளிப்பாடுகளில் ஒன்று, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணிலுக்கும் குமாரதுங்கவிற்கும் இடையில் அடிக்கடி ஏற்பட்ட தனிப்பட்ட மோதல்களாகும்.

இரு தரப்பினரும் ஒருவரையொருவர் விலக்கிக் கொள்ள, சமாதான பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதற்கு புலிகளின் ஆதரவைப் பெற விரும்பினர்.

விக்ரமசிங்கவிற்கும் குமாரதுங்கவிற்கும் இடையிலான அரசியல் போட்டி, முழு சமாதான முன்னெடுப்புகளுக்கும் மிகவும் சேதத்தை ஏற்படுத்தியது, அவர்களுக்கு இடையே ஒரு அரசியல் உடன்படிக்கையின்படி பேச்சுவார்த்தை நடத்தப் பிரிட்டிஷ் பாராளுமன்ற உறுப்பினர் லியாம் ஃபோக்ஸ் தானாகவே முன்வந்ததை அவர்கள் ஏற்றுக்கொண்டனர்.

மேலும், இனப்பிரச்சினைக்கு இருதரப்பு தீர்வு காணவும் அவர்கள் ஒப்புக்கொண்டனர். லியாம் ஃபாக்ஸ் உடன்படிக்கையின் முக்கிய உட்பிரிவுகளின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண ஒரு கூட்டுறவு அரசியல் சூழலை வளர்ப்பதை இலக்காகக் கொண்டிருந்தன.

இந்த ஒப்பந்தம் காகிதத்தில் நன்றாகத் தோன்றினாலும், உண்மையில் அது விக்ரமசிங்கவுக்கும் குமாரதுங்கவுக்கும் இடையிலான கூட்டுறவு உறவில் எந்த முன்னேற்றத்தையும் காட்டவில்லை. இத்தனை முயற்சிகள் இருந்தபோதிலும், இறுதியில் லியாம் ஃபாக்ஸ் உடன்படிக்கை குமாரதுங்கவிற்கும் விக்கிரமசிங்கவிற்கும் இடையிலான தனிப்பட்ட-அரசியல் போட்டியைச் சமாளிக்க அர்த்தமுள்ள எதையும் சேர்க்கவில்லை.

2000 இல் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட குமாரதுங்கவின் அரசியலமைப்பு வரைவுக்கு ஆதரவளிப்பதாக ஐ.தே.கவின் தலைமை தனது வாக்குறுதியைக் காப்பாற்றாதபோது, பகைமையின் தொடர்ச்சி இன்னும் அப்பட்டமாக மாறியது. அனைத்து அரசியலமைப்பு மாற்றங்களையும் உள்ளடக்கியதாக குமாரதுங்க தன்னால் முடிந்ததைச் செய்த போதிலும், அதற்கான ஆதரவைத் தர ஐ.தே.க. தலைமை தவறியது.

குமாரதுங்கவின் இந்த வரைவானது ஐ.தே.க. அங்கம் வகிக்கும் அரசியலமைப்புச் சீர்திருத்தச் செயல்முறையை மேற்பார்வையிட நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழுவால் முன்மொழியப்பட்டது. ஐ.தே.கவின் ஆதரவுடனேயே இந்த வரைபு இறுதிசெய்யப்பட்டது. விடுதலைப் புலிகளின் தலைமையும் குமாரதுங்கவின் முயற்சிகளை முடக்கத் தொடங்கிய நேரத்தில், குமாரதுங்கவுக்கு யூ.என்.பியின் துரோகம் வந்தது. ஒட்டுமொத்தமாக, வடக்கில் இராணுவப் போர்க்களத்திலும், சிங்கள அரசியல் உயரடுக்கின் அரசியல் போர்க்களத்திலும் இந்த பல்வேறு காட்சிகள் குமாரதுங்கவின் பிரபலமான அரசியல்-சமாதான திட்டத்தைப் பாதித்தன.

புலிகளுடனான பேச்சுவார்த்தை மேசையில் கிடைத்த வெற்றியின் ஆரம்பக் காட்சிகள் சிங்களவர்களிடமிருந்து அங்கீகாரத்தைப் பெற்றிருந்தன. ஆனால், அதைத் தொடர இயலாமல், புலிகளின் தலைமையும் தனது இராணுவ நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியதானது, தெற்கில் அரசியல் நெருப்பிற்கு மேலும் எரிபொருளைச் சேர்த்தது.

தெற்கில் ‘அமைதியான வழிகளில் சமாதானம்’ என்ற குமாரதுங்கவின் கருப்பொருள் பெற்றிருந்த மக்கள் அங்கீகாரம் மிகப்பெரிய பின்னடைவைக் கண்டது. புலிகளின் மூன்றாவது, போர் பிரகடனம், வடக்கில் இராணுவத் தாக்குதல்களைத் தொடுத்தது, மற்றும் இலங்கை கடற்படையின் பெறுமதியான கடற்படைக் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டது ஆகியவை சமாதானத்திற்கான இறுதி நம்பிக்கையையும் விட்டுவிடவில்லை.

எனவே, குமாரதுங்க புலிகளுக்கு எதிராக ஒரு பெரிய தாக்குதலுக்கு உத்தரவிடுவதன் மூலம் பதிலடி கொடுக்க முடிவு செய்தார்.

யாழில் அவர்கள் கட்டுப்பாட்டிலிருந்த பகுதிகளிலிருந்து புலிகளை முற்றாக விரட்டியடித்ததன் மூலம், குமாரதுங்க தனது தீவிரமான இராணுவ நடவடிக்கைகளை நியாயப்படுத்தினார்.

ஆரம்பத்தில், போர்க்களத்தில் ஏற்பட்ட இந்த திருப்பம் குமாரதுங்கவிற்கும் அவரது நோய்வாய்ப்பட்ட கூட்டணி அரசாங்கத்திற்கும் மிகவும் தேவையான அரசியல் நன்மைகளைக் கொண்டு வந்தது.

அதே நேரத்தில், அவை ‘அமைதியான வழிகளில் சமாதானம்’ என்ற முந்தைய பொது தார்மீக நிலைப்பாட்டிற்கு எதிராக நிலைப்பாட்டை உறுதி செய்தது.

இந்த ஆரம்ப வெற்றிகள் அரசாங்கப் படைகளால் உறுதிப்படுத்தப்பட்ட போதிலும், மூன்றாவது ஈழப்போரின் இறுதியில் அரச படைகளுக்கும் புலிகளுக்கும் இடையிலான இராணுவ வெற்றிகளின் ஒட்டுமொத்த இருப்புநிலை அரசாங்கத்திற்குச் சாதகமானதாக இருக்கவில்லை.

உதாரணமாக, யாழில் முன்னர் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த பகுதிகளை அரச படைகள் மீளக் கைப்பற்றிய போதிலும், ‘ஓயாத அலைகள்’ என்ற பதாகையின் கீழ், புலிகள் தொடர்ச்சியான இராணுவத் தாக்குதல்களைத் தொடுத்ததால் விரைவில் இந்தப் பகுதிகள் முற்றுகைக்கு உட்பட்டன.

புலிகள் இராணுவப் போர்முனையில் மேலும் மேலும் வெற்றியீட்டிய நிலையில், பொருளாதார இலக்குகள் உட்பட தெற்கு நோக்கி தமது இலக்குகளை விரிவுபடுத்தி ஆக்ரோஷமான தாக்குதல்களை வெற்றிகரமாக முன்னெடுத்தனர்.

இலங்கை மத்திய வங்கியில் நடத்தப்பட்ட குண்டுவெடிப்பு இலங்கையெங்கும் அதிர்வலைகளை உருவாக்கியது. இத்தாக்குதலில் நூற்றுக்கும் அதிகமான பொதுமக்கள் கொல்லப்பட்டனர், ஆயிரத்து நானூறு பேர் காயமடைந்தனர். நாட்டின் ஒரே சர்வதேச விமான நிலையம் மீதான தாக்குதல் ஆகியவை தேசிய பொருளாதாரத்தைப் பாதித்தன. பொருளாதார ரீதியில் முக்கியமான இலக்குகளுக்கு அப்பால், 1998இல் புலிகள் நாட்டின் மிகவும் புனிதமான பௌத்த தலமான கண்டியில் உள்ள ‘தலதா மாளிகை/ மீதும் பாரிய குண்டுத் தாக்குதலை நடத்தினர், அங்கு புத்தரின் பல் வைக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக இத்தாக்குதல் பெரும்பான்மை சிங்கள-பௌத்தர்கள் மத்தியில் சீற்றத்தை ஏற்படுத்தியது, அவர்கள் புலிகளுடனான குமாரதுங்கவின் சமாதான திட்டங்கள் குறித்து கடுமையான சந்தேகங்களைக் கொண்டிருக்கத் தொடங்கினர்.

தெற்கு அரசியல் மற்றும் போர்முனையிலிருந்து வரும் இந்த அழுத்தங்களின் கீழ், குமாரதுங்க,‘சமாதான வழிகளில் சமாதானம்’ என்ற தனது முந்தைய நிலைப்பாட்டை, ‘வரையறுக்கப்பட்ட யுத்தத்தினால் சமாதானம்’ என மாற்ற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

அவர் தனது சொந்த இராணுவ ஆலோசகர்களிடமிருந்து வெற்றி பெறுவதற்கான எந்த உறுதியையும் பெறவில்லை என்றாலும், அவரது பிந்தைய நிலைப்பாட்டிற்கு மகத்தான மதிப்புமிக்க அரச வளங்களைத் தியாகம் செய்ய வேண்டியிருந்தது. புலிகளுடன் ஒரு மட்டுப்படுத்தப்பட்ட போருக்குச் செல்வதன் மூலம், குமாரதுங்க சமாதானத்திற்காக அரச வளங்களை மட்டுமல்ல, கஷ்டப்பட்டுச் சம்பாதித்த தார்மீகக் கூட்டத்தையும் தியாகம் செய்யத் தயாராக இருந்தார். இராணுவ மோதல்கள் அதிகரித்த நிலையில், கண்காணிப்பு நடவடிக்கைகள் மற்றும் சோதனைச் சாவடிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க

குமாரதுங்க நாடு தழுவிய கூடுதல் நடவடிக்கைகளுக்கு உத்தரவிட்டார்.

இந்நடவடிக்கைகள் பாதுகாப்புக் காரணங்களுக்காகத் தவிர்க்கவியலாதாகிற்று. புலிகளின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தும் இந்த நடவடிக்கைகளின் கீழ் மிகவும் பாதிக்கப்பட்ட சாதாரண தமிழர்கள் மத்தியில் பொதுஜன முன்னணி அரசாங்கம் செல்வாக்கிழந்தது.

1999இல் குமாரதுங்க மீது, புலிகள் நடத்திய தாக்குதலுக்குப் பிறகு, குமாரதுங்காவின் ஒரு கண்ணைக் குருடாக்கும் வகையில் படு காயங்களுடன் அவர் உயிர் பிழைத்ததையடுத்து, போர்க்களத்தில் இராணுவ மோதல் புலிகளுக்கும் குமாரதுங்கவிற்கும் இடையில் தனிப்பட்டதாக மாறியது.

புலிகள் குமாரதுங்கவை படுகொலை செய்ய முயற்சித்தமை, தெற்கில் உள்ள பெரும்பான்மையினரிடமிருந்து அவருக்குத் தனிப்பட்ட அனுதாபத்தைப் பெற்ற போதிலும், 2000இல் யாழ். ஆனையிறவில் அரசாங்கத்தின் பிரதான இராணுவத் தளத்தைப் புலிகள் கைப்பற்றியபோது, இந்த அனுதாபங்கள் விரைவில் கலைந்தன.

இந்த நிகழ்வுகள், புலிகள் உடனான அரசியல் தீர்வை இலக்காகக் கொண்ட குமாரதுங்கவின் அரசியலமைப்புப் பொதியை பொது மக்களுக்கு விற்பனை செய்வதை இன்னும் கடினமாக்கியது. தனிப்பட்ட முறையில் குமாரதுங்கவின் தலைமை மற்றும் அவரது அரசியல் நம்பகத்தன்மையைக் குறை மதிப்பிற்கு உட்படுத்தும் சந்தர்ப்பத்திற்காகக் காத்திருந்த அவரது அரசியல் எதிரிகளின் விமர்சனங்களுக்கு குமாரதுங்க ஆளாகினார்.

இதனால் சுதந்திரத்துக்குப் பிந்தைய இலங்கையின் மிகவும் முற்போக்கான அரசியல் தீர்வாகக் கருதப்பட்ட உத்தேச அரசியலமைப்பு வரைபானது காற்றோடு போனது.

## கடிதங்கள்

### படகு பாதையை சீரமையுங்கள்

மட்டக்களப்பு- சந்திவெளி படகு பாதை கடந்த இரண்டு மாதங்களாக சேவையில் இல்லாதமையினால் குறித்த படகு பாதையினை பயன்படுத்தும் பொது மக்கள் பாரிய இன்னல்களுக்கு உள்ளாகி வருவதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

கோறளைப்பற்று பிரதேச சபைக்குட்பட்ட திகிலிவெட்டை, குடும்பிமலை, பேரில்லாவெளி, கோறாவெளி, பொண்டுகள்சேனை, அக்குராணை, முறுத்தானை போன்ற கிராமங்களைச் சேர்ந்த மக்களும் ஏறாவூர் பற்று பிரதேச சபைக்குட்பட்ட ஈரளக்குளம் கிராமத்தினை சேர்ந்த மக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இப்படகுப் பாதையானது செயலிளந்துள்ளமையினால் பல மைல் தூரம் சுற்றியே தாம் பயணம் செய்ய வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக பொது மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

படகுப்பாதையினை சீர் செய்து தருமாறும் கோறளைப்பற்று பிரதேச சபையிடம் அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

– எம்.எஸ்.எம்.நூர்தீன்





# புதுக்குடியிருப்பில் கொமர்ஷல் வங்கி

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடற்றொழில் துறையால் வேகமாக வளர்ச்சியடைந்து வரும் புதுக்குடியிருப்பு நகரில் கொமர்ஷல் வங்கியின் அண்மைய கிளை திறக்கப்பட்டதன் மூலம் உலகத்தரம் வாய்ந்த வங்கிச் சேவைகள் இந்நகரை வந்தடைந்துள்ளன.

கொமர்ஷல் வங்கியின் தலைவர் ஷர்ஹான் முஹ்ஸீன், முகாமைத்துவப் பணிப்பாளர்/ பிரதம நிறைவேற்றதிகாரி சனத் மனதுங்க, பிரதம செயற்பாட்டு அதிகாரி எஸ்.பிரபாகர் மற்றும் சிரேஷ்ட மற்றும் பெருநிறுவன முகாமைத்துவத்தின் உறுப்பினர்கள் இந்தக் கிளையின் திறப்பு விழாவில் கலந்து கொண்டனர்.

1ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவில் அமைந்துள்ள புதிய கிளையானது, கடன் பிரிவு மற்றும் நகை அடகு வைத்தல் உள்ளிட்ட பல்வேறு வங்கிச் சேவைகளுடன், தன்னியக்க பணம் பெறும் இயந்திரம் (ATM) மற்றும் பண மீள் சுழற்சி இயந்திரம் (CRM) உட்பட முழு நேர அணுகலுடன் முழு அளவிலான வங்கிச் சேவைகளை வழங்கவுள்ளது.

கொமர்ஷல் வங்கி இலங்கையின் மிகப் பெரிய தனியார் துறை வங்கி மற்றும் உலகின் சிறந்த 1,000 வங்கிகளில் பட்டியலிடப்பட்ட முதல் இலங்கை வங்கியாகும். கொமர்ஷல் வங்கி திறன்மிகு முறையில் அமையப்பெற்ற கிளை வலையமைப்புக்கள் மற்றும் 974 தானியங்கி இயந்திரங்களை கொண்டு இயங்குகின்றது. கொமர்ஷல் வங்கி இலங்கையின் சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகத் துறைக்கு பாரிய கடனுதவி வழங்குவதோடு நாட்டின் வங்கித் துறையில் டிஜிட்டல் புத்தாக்கங்களில் முன்னணியில் உள்ளது. வங்கியின் வெளிநாட்டு செயற்பாடுகள் பங்களாதேஷை உள்ளடக்கியது, அங்கு வங்கி 20 கிளைகளை இயக்குகின்றது: மியன்மார் நய் பியி தாவில் நுண்நிதி நிறுவனத்தினை கொண்டுள்ளது.

கொமர்ஷல் வங்கியின் தலைவர் ஷர்ஹான் முஹ்ஸீன், முகாமைத்துவப் பணிப்பாளர்/ பிரதம நிறைவேற்று அதிகாரி சனத் மனதுங்க மற்றும் பிரதம செயற்பாட்டு அதிகாரி எஸ்.பிரபாகர் ஆகியோர் புதிய கிளையைத் திறந்து வைப்பதை படத்தில் காணலாம்.

## வர்த்தக மெய்வல்லுநர் போட்டிகளில்
# SLT-MOBITEL பிரகாசிப்பு

39ஆவது வருடாந்த மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் 2024 போட்டிகளில் SLT-MOBITEL அணி சிறப்பாக தமது திறமைகளை வெளிப்படுத்தி இரண்டாமிடத்தைப் பெற்றுக் கொண்டது.

இந்நிகழ்வு அண்மையில் கொழும்பு சுகததாஸ மைதானத்தில் மூன்று தினங்கள் நடைபெற்றது.

அதிகம் போட்டிகரமானதாக அமைந்திருந்த இந்த சம்பியன்ஷிப் போட்டிகளில், SLT-MOBITEL மெய்வல்லுநர் அணி சுமார் 50 கூட்டாண்மை நிறுவனங்களைச் சேர்ந்த 2,500க்கும் அதிகமான போட்டியாளர்களுடன் போட்டியிட்டிருந்தது.

சிறந்த திறன்கள், அர்ப்பணிப்பு மற்றும் குழுநிலைச் செயற்பாடு ஆகியவற்றை வெளிப்படுத்தி SLT-MOBITEL அணி பல விருதுகளையும் கௌரவிப்புகளையும் பெற்றிருந்தது.

ஆண்கள் பிரிவில் இரண்டாமிடம், Best Athlete Novices Men மற்றும் Best Athlete Over 40 Men ஆகிய கௌரவிப்புகளையும் பெற்றுக் கொண்டிருந்தது. இந்த சாதனைகளினூடாக SLT-MOBITEL அணியின் கடின உழைப்பு, விளையாட்டு பண்பு மற்றும் அர்ப்பணிப்பு ஆகியன உறுதி செய்யப்பட்டு, 'Together, we can win' எனும் தமது தொனிப்பொருளையும் பிரதிபலித்திருந்தது.

வியாபாரத்தில் சிறப்பை கொண்டிருப்பதற்கான நிறுவனத்தின் உறுதிமொழியை மாத்திரமன்றி, அதன் கூட்டாண்மை கலாசாரத்தின் சகல பிரிவுகளையும் வெளிப்படுத்துவதாக இந்த சாதனை அமைந்துள்ளது.

அத்துடன், குழுநிலை செயற்பாடு, ஒழுக்கம் மற்றும் ஆரோக்கியமான பணி-வாழ்க்கை சமநிலை ஆகியவற்றை கட்டியெழுப்புவதில் விளையாட்டு வகிக்கும் முக்கிய நிலையை உறுதி செய்வதாகவும் அமைந்துள்ளது.

இந்த உயர் மட்ட நிகழ்வில் SLT-MOBITEL இன் வெற்றிகரமான செயற்பாட்டினூடாக, தமது ஊழியர்கள் மத்தியில் விளையாட்டுத் திறன் மற்றும் மெய்வல்லுநர் திறன் ஆகியவற்றை ஊக்குவிப்பதற்கான நிறுவனத்தின் அர்ப்பணிப்பு வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

வருடாந்த வர்த்தக மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் என்பது இலங்கையின் கூட்டாண்மை விளையாட்டு நாட்காட்டியில் முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாக அமைந்துள்ளது.

அத்துடன், நாட்டின் முன்னணி நிறுவனங்களின் சிறந்த மெய்வல்லுநர்களை ஒன்றிணைக்கும் நிகழ்வாகவும் உள்ளது. மேலும், வர்த்தக மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் 2024 என்பது உத்தியோகபூர்வமாக கௌரவிக்கப்பட்டுள்ளதுடன், உலக மெய்வல்லுநர் நாட்காட்டியிலும் உள்வாங்கப்பட்டுள்ளது.





# தங்க மகன் நீ

பார்க்கும் திசை தோறும்
பசும் தளிர்கள் பூத்திருக்கும்
எம் தாய் திருநாட்டை
சுற்றிக் கொண்ட நீலக் கடல்
செங்கடலாய் சிவந்து நிற்க
ஊரெல்லாம் செம்மலர்கள்
அஞ்சலிக்காய் காத்திருக்க
காற்றெல்லாம் தென்றலாய் மாறி விட
கனவெல்லாம் நிஜப் பூக்கள்
பூத்து பொழுது விடிகிறது...

புது வடிவம் தேடி
ஐப்பசி திங்கள் இருபத்தோராம் நாள்
சுதந்திரப் புதுக் காற்றை
சுவாசிக்க வரும் இந்நாள்
புது வரவாய் விடிகிறது
அனுரவின் வெற்றி
ஆனந்த பெரு வெளியில்
அமைதியாய் அலையலையாய்
காத்திருந்து பூத்தது...

வாய்மை பேசி
வார்த்தைகளில் வித்தகமாடி
தேசமெங்கும் திரிந்து
கால் சிவந்து காத்திருந்தோருக்கு
புன்னகைத்து கையசைத்து
தேடித்தந்த வீரவெற்றி
சிங்கமென கர்ச்சித்து
சிங்கள மொழி அவர் வாயில்
தங்க மொழியானது
சொல்லடுக்கு வார்த்தைகளால்
சோகம் களைந்திடும்
வில் அம்பாய் எம் நெஞ்சில்
விழுந்தது...

வல்லபம் செய்திட
துயர் வலை அறுத்து
தொல்லைகள் தொலைந்திட
வரம் பெற்ற திரு நாளிது
வரலாறு உனை வாழ்த்திட
வாய் திறந்து நிற்கிறது
கட்டி வைத்த துயரங்கள்
காற்றில் விட காலம் கனிகிறது
உன்னுடைய வாய் மொழிகள்
ஏழைகளின் இதயத்தில்
தாய் மொழி
கடனில் தத்தளித்து
நெஞ்சம் கனத்து நிற்கும்
தாய் நாட்டை மீட்க
வந்த தங்க மகன் நீ
தானைத் தலைவன் நீ
தம்பிகள் தளபதிகள்
இத் தீவை திடமுற
காத்திடவே வாழ்த்துகிறோம்...



- கேகாலை - எஸ்.கிருஷ்ணன்



# மனிதம் எங்கே?

காலக்கணக்கிலிருந்து
தப்பிக்க இயலாது
அன்றெல்லாம் முன் செய்த
வினைக்குப் பலன் பின்னென்பர்
இன்று உடனடித் தீர்ப்பால்
உழலுதுமானிடம்

எத்தனை சூழ்ச்சிகள்
எத்தனை பொய்கள்
எத்தனை அகங்காரங்கள்
எத்தனைநாடகங்கள்

பொய்யும் போலியும்
மெய்தனைமறைத்து
வாழையடி வாழையான
உறவுகளையும் தொலைத்து
நவீனம் என்றதற்கு
நாற்றப் பெயருமாம்
நவீனத்திற்கு ஏன் இந்தப்பழி
நாற்றமனமென்று
ஏற்றப் பெயர் சூட்டு
எடுப்பாயிருக்கும் அது

காலமாற்றமென்று ஏன்
வீண் பழிகாலத்திற்கு
மனிதனின் மாற்றமென்றே
கூறலாம் தெளிவாய்
ஆசை மாலைகளுக்குள்
மாட்டியதலைகளுக்கு
மாலைகளே கழுத்தை
நெரிக்குமென்று
அறிய விடாத விதியும்

ஆயுள் குறையுதென்று
உளறல்கள் எதற்கு
மகிழ்வாய் வாழ்ந்தால்
ஆயுளும் கூடுமாம்
அழிவும் இல்லையாம்
பிறர் மகிழ்ச்சி சிதைத்து
வாழ்ந்திட இயலுமோ
இனம்புரியா வலியாய்
இதயமும் கருகும்

துரோகத்தின் சாயல்கள்
தூக்கில் தானின்று
மறவாதேமானிடா



- குகதா கிளிநொச்சி

# சமுதாய சிற்பிகள்

சமுதாய சிற்பிளேசிலை செதுக்க வாருங்கள்
சீர்குலைந்த சமூகத் சிறப்பாக்க வழியமைப்போம்
செத்தமிழாய்ச் செம்மொழியாய் செழித்த வழித்தோன்றல்களாய்
சொற்களிக சாற்றும் சீரழிந்து வாடுஒன்றோம்...

நல்லன நாம் பிறந்தோய் நன்னெறிகள் மாய் வளர்த்தோம்
தான்மறைகள் நானவர்கள் நல்லவழிப்போதனைகள்
தங்வேத் தூய்வழியாய் நுண்ணறிவு நிரப்பி வைத்தார்
பாயிரப்பயிராம் பயனின்றிப் போனதின்று
கடல்வணிகம் கப்பல்கள் கடந்து பல ஆழிகளும்
கணல்லெனத் தானியங்கள் கொண்டுவந்த திரவியங்கள்
சிநாராயொ கோபுரங்கள் கோவில்கள்
நொளின்று கொள்ளை கொண்டு கதியற்றோர் ஆக்கியதே...

சேரசோழ பாண்டியர் தம் செங்கோல்கொள் சாம்ராஜ்யம்
சங்கத் தமிழ்முழக்கம் சரித்திரத்தில் சான்று தரும்
சரிந்து மறைந்தின்று சர்வமெங்கும் சொல்வதற்கு
சொந்தநிலமற்ற சிறுபான்மை நாமானோம்
நாடுவிட்டு நாடு சென்ற நிர்க்கதியாய் நோகின்றோம்
நம் மொழியும் நமக்கென்ற நற்குணங்கள் நாமிழந்தோம்...


நாதியற்ற நக்குடிகள் நாட்டினிலே நொந்துலைத்தும்
நானை வளர் இளம்தர்கள் நாசவழி நாட்டமுமேன்
தொய்ந்துபோன தொடரதனாய்த் தடம்புரளும்
தலைமைகளும் தாவித் திரிந்தலையும் தத்தளிக்கும் தரமிழந்தோர்
தவிர்த்து நீவிர் தலையெடுத்து தழைத்துயர்ந்து வாருங்கள்
தரணியெங்கும் தமிழர் குலம் தலைதூக்கி வளர்ந்துயர
வேண்டுமின்று புதுவடிவம் வேற்றுமைகள் போக்கிடுவோம்...

விழிப்புணர்வு வீரமுள்ள வீறுகொண்ட வாரிசுகள்
வலிமைமிகு விற்பனராய் விவேக சிந்தை வித்தகராய்
வளர்ந்துயர்ந்து வாழ்வதற்கு விசித்திரங்கள் படைத்திடுவீர்
சிந்தனைச் சிற்பிகளாய் சித்திரம் வரைந்திடுவோம்
சிறந்த ஒரு சமுதாயம் செதுக்கி வடிவமைப்போம்
சாதியென்றும் சமயமென்றும் வீணடிக்கும் திசைமாறி
சமதர்ம சர்வமத சர்வமய வழியமைப்போம்...



- ய.தம்பி சிவச்செல்வன்
ஆக்லாந்து நியூஸ்லாந்து





# அகால மரணத்தை கவர்ந்து இழுக்கும்

## ஒக்டோபர் 03ஆம் திகதி உலக மதுபான தடுப்பு தினமாகும்



சம்பத் த சேரம்,
நிறைவேற்றுப் பணிப்பாளர்,
மதுபானம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம்.

மதுபான பாவனையினால் அரசாங்கத்திற்கு வருடாந்தம் ஏற்படும் சுகாதார மற்றும் பொருளாதார செலவீனங்கள் 237 ரூபாய் பில்லியன்களாகும்.

ஒக்டோபர் 03ஆம் திகதி உலக மதுபான தடுப்பு தினமாகும். மதுபான பாவனையினால் வருடாந்தம் உலகலாவிய ரீதியில் சுமார் 03மில்லியன் பேர் அகால மரணமடைகின்றனர்.

சர்வதேச ரீதியாக ஏற்படும் 10 மரணங்கள் 08 மரணங்கள் தொற்றா நோய்களினாலேயே ஏற்படுகின்றன. தொற்றா நோய்கள் ஏற்படுவதற்கான பிரதான நான்கு காரணங்களுள் முதன்மை காரணமாக மதுபான பாவனை காணப்படுகின்றமைக் குறிப்பிடத்தக்கது.

நாடு என்ற ரீதியில் மதுபானம் மற்றும் போதைப்பொருள் பாவனைகளால் பல்வேறு வகையான சுகாதார, பொருளாதார மற்றும் சமூகப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. எமது நாட்டில், மதுபான பாவனையினால் தினமும் சுமார் 50 பேர் அகால மரணமடைவதுடன், வருடாந்தம் சுமார் 15,000/ 20,000 பேர் அகால மரணமடைகின்றனர்.

மேலும், 2022ஆம் ஆண்டு மதுபானத்தினால் கிடைக்கப்பெற்ற மது வரி வருமானம் 165 ரூபாய் பில்லியன் ஆகும். 2023ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் மேம்பாட்டு நிதியத்தால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் படி, 2022ஆம் ஆண்டு மதுபான பாவனையினால் ஏற்படும் பொருளாதார மற்றும் சுகாதார சீர்கேடுகளுக்காக 237 ரூபாய் பில்லியன் செலவிடப்பட்டுள்ளமைக் குறிப்பிடத்தக்கது, ஆகவே மதுபானம் ஒரு

நாட்டிற்கு இலாபகரமானது அல்ல என்பதும் தெளிவாகின்றது. மேலும், மது வரியினால் கிடைக்கப்பெறும் வரி வருமானத்தை விட மதுபான பாவனையினால் ஏற்படும் பொருளாதார மற்றும் சுகாதார செலவினங்கள் அதிகம் என்பது இப்பகுப்பாய்வின் மூலம் விஞ்ஞான ரீதியாக ஒப்புவிக்கக்கூடியதாகவுள்ளது.

2006ஆம் ஆண்டு 27ஆம் இலக்க, தேசிய மதுபானம் மற்றும் புகையிலை மீதான அதிகார சபை சட்டத்தின் படி, மதுபானம் மற்றும் புகைப்பொருள் விளம்பரங்கள் தடை செய்யப்பட்டுள்ளன. எனினும், இச்சட்டத்தை மீறும் வகையில் மதுபான நிறுவனங்களால் பிள்ளைகளையும், இளைஞர்களையும் இலக்கு வைத்து பல்வேறு விளம்பரங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

இளைஞர்களும், சிறுவர்களும் மதுபான நிறுனவங்களின் பிரதான இலக்குக் குழுக்களாகும்.

மதுபான பாவனையினால் அகால மரணமடைகின்ற ஒவ்வொரு வாடிக்கையாளர்களுக்குப் பதிலாகவும் இளைஞர்களையும், சிறுவர்களையுமே இலக்கு வைக்கின்றனர், அதற்காக மதுபானத்திற்கான கவர்ச்சியை அதிகரித்துக் காண்பிப்பது குறிப்பிட்ட மதுபான நிறுவனங்களின் இலக்காகும்.

மதுபான பாவனையில் வீழ்ச்சி ஏற்படுவதானது நாட்டிற்கு சிறந்த ஒரு குறி காட்டியாகும்.

அதாவது, மதுபான பாவனையில் வீழ்ச்சி ஏற்படும்போது, சுகாதார செலவினங்கள் குறைவடையும், பொது மக்களின் சுகாதாரம் விருத்தியடையும், குடும்பங்களுள் மகிழ்ச்சி, ஒற்றுமை ஆகியன விருத்தியடையும்.

உலக சுகாதார நிறுவனத்தின் கூற்றின் படி, மதுபானத்திற்கான வரி அறவிடுதல் மற்றும் விஞ்ஞான ரீதியாக மதுபானத்திற்கான விலையை நிர்ணயித்தல் ஆகியவை விஞ்ஞான ரீதியானதும், செலவினம் குறைந்ததுமான பயனுள்ள மதுபானக் கட்டுப்பாட்டு முறைமையாகும்.

மதுபானத்திற்கான வரியை அதிகரிக்கும் போது, மதுவரி வருமானத்தை அதிகரித்துக்கொள்ள முடிவதுடன், மதுபான பாவனையைக் குறைத்துக்கொள்ளவும் இயலும். கடந்த வருடத்தில் மது வரி அறிக்கைகளின் பகுப்பாய்வை மேற்கொள்ளும் போது, மதுபானத்திற்கான வரி 34 வீதம் அதிகரிக்கப்பட்டதால் மது வரி வருமானம் அதிகரிக்கப்பட்டு அரசாங்கத்திற்குக் கிடைக்கப்பெற்ற வரி வருமானமும் அதிகரித்துள்ளது என்பது தெரியவந்துள்ளது.

2022ஆம் ஆண்டு மது வரி வருமானம் ரூபாய் பில்லியன்கள் 165.2 ஆக காணப்பட்டதுடன் 2023ஆம் ஆண்டு மது வரி வருமானம்

> **மதுபானத்திற்கான வரியை அதிகரிக்கும் போது, மதுவரி வருமானத்தை அதிகரித்துக்கொள்ள முடிவதுடன், மதுபான பாவனையைக் குறைத்துக்கொள்ளவும் இயலும். கடந்த வருடத்தில் மது வரி அறிக்கைகளின் பகுப்பாய்வை மேற்கொள்ளும் போது, மதுபானத்திற்கான வரி 34 வீதம் அதிகரிக்கப்பட்டதால் மது வரி வருமானம் அதிகரிக்கப்பட்டு அரசாங்கத்திற்குக் கிடைக்கப்பெற்ற வரி வருமானமும் அதிகரித்துள்ளது என்பது தெரியவந்துள்ளது**

181.10 பில்லியன்கள் ரூபாவாக அதிகரித்துள்ளது.

ஆகவே, நிர்ணயிக்கப்பட்ட விலை சூத்திரத்தின்படி, மதுபானத்திற்கு வரி அறவிடுவதன் மூலம் மதுபானத்தின் பயன்பாட்டைக் குறைக்கவும், அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரிக்கவும், மதுபானத்தினால் ஏற்படும் சுகாதார மற்றும் பொருளாதாரச் செலவுகளைக் குறைக்கவும் முடியும். மதுபான பயன்பாட்டைக் குறைப்பதற்கும் மதுபான பாவனையை ஆரம்பிக்கும் வீதத்தைக் குறைப்பதற்கும் வரி அறவீடு மற்றும் விலை நிர்ணயம் ஆகியன சிறந்ததொரு வழிமுறையாகும்.

புதிய அரசாங்கத்தின் ஆட்சியில், புதிய வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தவுள்ள இவ்வேளையில், நாட்டில் காணப்படும் மதுபானப் பிரச்சினைகளைக் குறைப்பதற்காக மதுபானம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள பின்வரும் முன்மொழிவுகளை அரசாங்கம் உடனடியாக நடைமுறைப்படுத்துமென நாம் நம்புகின்றோம். மதுபான பிரச்சினைகளைக் கட்டுப்படுத்துவதற்கான ஆலோசனைகள் மற்றும் பரிந்துரைகள்...

01. பணவீக்கம் மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்றவாறு ஒவ்வொரு ஆண்டும் கலால் வரி அதிகரிக்கும் விஞ்ஞான வரி சூத்திரத்தை நடைமுறைப்படுத்துதல்.
02. மதுபான நிறுவனங்களால் ஏற்கெனவே அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டிய வரிகளை மீளப்பெறுவதற்கும் எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமையைத் தவிர்த்துக்கொள்வதற்குமான முறையான வரி அறவீட்டு முறையைத் தயாரித்தல்.
03. மதுபான பயன்பாடு மற்றும் ஊக்குவிப்பைக் குறைப்பதற்கான தற்போதைய சட்டங்கள் மற்றும் கொள்கைகளை நடைமுறைப்படுத்துதல், அத்துடன், மதுபானம் மற்றும் புகையிலை மீதான தேசிய அதிகார சபையின் (NATA) உத்தேச திருத்தங்களை விரைவாக அமுல்படுத்துதல்.
04. தற்காலிக மதுபான அனுமதிப்பத்திரங்களை வழங்காதிருத்தல் மற்றும் சுற்றுலாத் தொழில் என்ற போர்வையில் வழங்கப்படும் அனுமதிப்பத்திரங்களுக்கான பொறிமுறையொன்றை அறிமுகப்படுத்துதல்
05. 2016ஆம் ஆண்டு அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்ட மதுபானக் கட்டுப்பாடு தொடர்பான தேசியக் கொள்கையை நடைமுறைப்படுத்துதல்.
06. சட்டவிரோத மதுபான வகைகளைக் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான சட்டங்களை அமுல்படுத்துதல், மேலும் அந்த நோக்கத்திற்காகச் செயற்படும் நிறுவனங்களை வலுப்படுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
07. மதுபான பாவனைக்கு ஆளாகுவதற்கு முன்னரே இளைஞர்களையும், சிறுவர்களையும் பாதுகாப்பதனை நோக்கமாகக் கொண்டு தேசிய போதைப்பொருள் தடுப்பு வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்.
08. மதுபான பாவனையாளர்களை அப்பாவனையிலிருந்து விடுதலையாக்குவதற்காக ஆலோசனை, சிகிச்சைகள், பிற சேவைகள் மற்றும் தேவையான திட்டங்களை வகுத்து செயற்படுத்துதல்.
09. ஏற்கெனவே காணப்படும் கொள்கைகளை வலுவிழக்கச் செய்வதற்கும், புதிய கொள்கைகள் அறிமுகப்படுத்தப்படுவதைத் தடுப்பதற்கும் மதுபானத் தொழில்துறையின் தலையீடுகளைத் தடுப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

மேற்படி பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கான முறையான வேலைத்திட்டத்தை புதிய அரசாங்கம் தயாரித்து இம்முறை மதுபான தடுப்பு தினத்தில், மதுபான பிரச்சினைகளை நாட்டில் குறைத்துக்கொள்வதற்காக விரைந்து செயற்படும் எனமதுபானம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம் (ADIC) எதிர்பார்க்கின்றது.

---

விறு விறுப்பாக நகரும்

# 'லப்பர் பந்து'



ஹம்தா லதீப்,
ஊடக கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.




அறிமுக இயக்குநர் தமிழரசன் பச்சமுத்து தயாரிப்பில் ஹரிஷ் கல்யாண், அட்டகத்தி தினேஷ் மற்றும் பலர் நடித்து சமீபத்தில் வெளியான 'லப்பர் பந்து' திரைப்பட விமர்சனம். இந்தப் படத்தின் கதை கடலூரில் இருக்கும் ஹரிஷ் கல்யாணுக்கு சிறுவயதில் இருந்து கிரிக்கெட் மீது ஆர்வம். இதனால் அவர்களின் ஊரில் இருக்கும் 'ஜாலி பாய்ஸ்' அணிக்காக விளையாட வேண்டும் என விரும்புகின்றார். அந்த அணியின் தலைவர் காளி வெங்கட் இவரை இணைத்துக் கொள்ள விரும்பினாலும், அந்த அணியில் இருக்கும் மற்றவர்கள் சில காரணங்களுக்காக தொடர்ச்சியாக அன்பு எனும் ஹரிஷ் கல்யாணைப் புறக்கணிக்கின்றார்கள். இச்சந்தர்ப்பத்தில் ஜாலி பாய்ஸ் அணியையே தோற்கடிக்க கூடிய 'கெத்து' எனும் அட்டகத்தி தினேஷை சிறுவயதிலேயே அவதானிக்கின்றார் அன்பு. பத்து வருடங்கள் கழித்தும் அன்பின் கிரிக்கெட் மீதான ஆர்வம் குறையாததனால் தனக்கு கிடைக்கும் நேரங்களில் கிரிக்கெட் விளையாடுவதை வழக்கமாகக் கொண்டிருக்கின்றார். இந்நிலையில் தான் சிறுவயதில் ஆச்சரியப்பட்ட கெத்து எனும் கதாபாத்திரத்தை மீண்டும் சந்திக்கின்றார். இவர்கள் இருவரும் எதிர்பாராத ஒரு சூழலில் எதிரெதிர் அணியில் போட்டியிடும் சந்தர்ப்பம் ஏற்பட்டு அங்கு மோதலும் ஏற்படுகின்றது. அன்பு ஒரு பெண்ணை காதலிக்கின்றான் அவளின் தந்தை தான் "கெத்து" இதற்குப் பிறகு என்ன நடந்தது என்பதுதான் படத்தின் கதை.

திரைப்படத்தின் நிறைகளைப் பற்றிப் பார்க்கும் போது, திரைக்கதை சிறப்பாக அமைந்துள்ளது. இது ஒரு விளையாட்டு சார்ந்த திரைப்படமாகக் காணப்படுவதனால் அதற்கே உரிய சில பண்புகளையும் தாண்டி இங்கு படத்தின் கதாபாத்திரங்களே திரைப்படத்திற்கு மேலும் வலுவூட்டியுள்ளன. எனவே இங்கு கதாபாத்திர வார்ப்பு முறை சிறப்பாக உள்ளது. திரைப்படத்தை விளையாட்டு சார்ந்தது என்று மட்டும் சுருக்கி விடமுடியாது, மாறாகத் தன்மானம் விளையாட்டு மற்றும் உறவுகளுக்கிடையில் செலுத்தும் செல்வாக்கு, விளையாட்டு மீதான அளவு கடந்த ஆர்வம் மற்றும் சாதிய பிரச்சினையை அழுத்தமாகவும் காட்டியிருந்த விதம் போன்றவற்றில் படம் வெற்றி பெற்றுள்ளது.

கதாபாத்திரங்கள், காட்சி அமைப்புகள் மூலமாக இதன் கதையை அடையாளப்படுத்தும் போது கெத்து கிரிக்கெட் விளையாடுவது அவரின் மனைவிக்குப் பிடிப்பதில்லை என்பதைப் பார்வையாளர்களுக்குச் சொல்லும்போது, கெத்தின் மனைவி கதாபாத்திரத்தை அறிமுகப்படுத்தி அவர் அந்த மைதானத்தில் என்ன செய்கின்றார் என்பதை வைத்துத்தான் படத்தின் தலைப்பு போடும் இடம் அமைகின்றது. இன்னும் ஒரு முக்கியமான காட்சி பெண் பார்க்க வரும்போது இரண்டு கதாபாத்திரங்களும் மைதானத்தில் இருக்கும் சிந்தனை எல்லாம் சிறப்பாகவே உள்ளது. இந்த மொத்த காட்சிகளுடன் இடைவேளைக்கு முற்பட்ட காட்சிகள் எழுதப்பட்டிருந்த விதமும் காட்சிப்படுத்தப்பட்ட விதமும் கொஞ்சம் கொஞ்சமாக விறுவிறுப்பை ஏற்படுத்தி இடைவேளையில் நிறுத்திய விதம் என்று அனைத்தும் அருமையாக இருந்தது.

கிரிக்கெட் போட்டியிலும் சில சுவாரஸ்யமான விடயங்கள் இடம் பெற்றுள்ளன. எதிரணியே கெத்தை தோற்க விடாமல் பார்த்துக் கொள்ளும் காட்சி, அன்பு சின்ன வயதில் பார்த்த பையன் ஒருவன் எதிரணியில் விளையாடுவது, இக்கட்டான சூழலில் அப்பாவும் மகளும் துடுப்பாட்டத்தில் ஈடுபடுவது, "நீ எப்படியும் வந்துருவேன்னு தெரியும், இப்ப கிளம்பு." என்று கதாநாயகி சொல்லும் காட்சி என்று நிறைய காட்சிகளை அடக்கிக் கொண்டு செல்லலாம் திரைப்படத்தின் மற்றுமொரு பாராட்டத்தக்க விடயம் படம் முழுக்க இழையோடுகின்ற நகைச்சுவை தான். விறுவிறுப்பான காட்சிகளிலும் எம்மை சிரிக்க வைத்து விடுகின்றது. அதேசமயம் படத்தின் உணர்வுகளையோ அல்லது தீவிரத் தன்மையையோ கொஞ்சமும் குறைக்காதது தான் இந்தப் படத்தின் மிகப்பெரிய வெற்றி. குறிப்பாக இடம்பெற்றுள்ள உரையாடல்கள் சாதாரணமாக நாம் நம் நண்பர்களுக்குள், குடும்பத்திற்குள் பேசுவது போன்று அமைந்துள்ளது. எடுத்துக்காட்டாகப் படத்தின் முதல் காட்சியில் பேருந்தில் விஜயகாந்தின் பழைய பாடலான "ராசி தான் கைராசி" தான் என்ற பிரபலமான பாடல் ஒலிக்கும்போது பெரியவர் ஒருவர் "என்னதான் இருந்தாலும் ராஜா ராஜா தான்" என்று சொல்லுவதும் அதற்கு இன்னொருவர் "ராஜா ராஜா தான் ஆனா இந்தப் பாட்டு தேவா" என்று பதிலளிப்பது தொடங்கி முதல் காட்சியிலிருந்து தொடர்ச்சியாகச் சிரிக்க வைக்கின்றார்கள். "நீ வேணா பாரேன் உனக்கும் அவனை ரொம்ப பிடிக்கும் பா அவ நம்மாளு" என்று கதாநாயகி சொல்லும்போது "ஓ நம்மாளுகளா?" என்று பாட்டி கேட்பது, ஜென்சன்திவாகரும் பாலசரவணனும் ஒருவரை ஒருவர் மாறி மாறி கிண்டல் அடிக்கும் காட்சி என பல காட்சிகளில் எம்மை சிரிக்க வைக்கின்றனர்.

முக்கியமான உணர்வு வெளிப்பாடுகள் எல்லாம் ஆழமாக இடம்பெற்றுள்ளது. படத்தின் இரண்டாம் பாதியில் மாமியாருக்கும் மருமகளுக்கும் இடையிலான காட்சி மிகவும் அருமையாக இருந்தது. அதேபோல காளி வெங்கட் தன்னுடைய மகளை விளையாட அனுப்பியதற்கு நன்றி சொல்லும் சிறிய பொழுதுகள் கூட நன்றாக இருந்தது. ஹரிஷ் கல்யாண், சஞ்சனா மூர்த்தியுடைய காதல் காட்சிகள் இயல்பாக இருந்தது. ஆனால், சஸ்விகா, அட்டகத்தி தினேஷினுடைய காதல் காட்சிகள் மிகவும் யதார்த்தமாக இருந்தது.

படத்தின் வெற்றிக்குக் காரணம் அதன் வசனங்கள் தான். இந்த திரைப்படத்தின் வசனகர்த்தா மற்றும் இயக்குநர் தமிழரசன் பச்சமுத்து இதற்கு முன்பே விகடன் விருதுகளில் 'நெஞ்சுக்கு நீதி' என்ற திரைப்படத்திற்காகச் சிறந்த வசனகருத்தாவிற்கான விருதினையும் பெற்றிருந்தார். "என்னைக்குமே ஒரு திறமைக்காரன் இன்னொரு திறமைக்காரன ஒத்துக்கிட்டதா சரித்திரமே இல்லல" என்று கேட்பது, "உனக்கு கிரிக்கெட் இவ்வளோ புடிக்கிறதுக்கு என்ன ரீசன்?" என்று ஒரு கதாபாத்திரம் கேட்கும் போது "பிடிக்கும் அதான் ரீசன்" என்று பதில் அளிப்பது போன்ற நிறையக் காட்சிகளை இவரின் வசனங்களுக்கு எடுத்துக்காட்டலாம்.

கதாபாத்திரங்களின் நடிப்பினை பார்க்கும்போது, அன்பு எனும் கதாபாத்திரத்தில் ஹரிஷ் கல்யாண் மிகவும் பொருத்தமான நடிப்பை வெளிப்படுத்தியுள்ளார். தனது குடும்பம், நண்பர்கள், காதலியுடன் மிகவும் கலகலப்பாக இருப்பவராகவும், கெத்தை காணும் போது, தனது கோபத்தை கட்டுப்படுத்த முடியாமல் கோபத்தைக் காட்டுவது, இரண்டாம் பாதி முழுக்க கெத்திடம் மன்னிப்பு கேட்கலாமா? வேண்டாமா? என்று போவதும் அங்கு அவரின் தன்மானம் தடுப்பதும் என படம் முழுவதுமே நடுநிலைமையானதும் கனமானதுமான நடிப்பைக் கொடுத்துள்ளார்.

என்னதான் இந்தப் படத்தின் கதாநாயகனாக ஹரிஷ் கல்யாண் இருந்தாலும், கதையின் உண்மையான கதாநாயகன் அட்டகத்தி தினேஷ் தான் என்பதில் எந்த ஒரு மாற்றுக் கருத்தும் கிடையாது. ஏனென்றால், எந்த ஒரு சலிப்பும் இல்லாமல் ஒவ்வொரு காட்சிகளிலும் நடித்துள்ளார். தனது மனைவிக்குப் பயந்து டிராக்டரில் ஏறிப் போகும் காட்சி, "என்ன விட்டுவிட்டுப் போக மாட்டாயே" என்று அழுது கொண்டே கேட்கும் காட்சி என்று எல்லாவற்றிலும் சிறப்பாக நடித்துள்ளார். இதனால் இவரது எதிர்காலத்திற்குத் தனித்துவமான படமாகவும் இது இருக்கும் என்று எதிர்பார்க்கலாம். பெண் கதாபாத்திரங்களை ஏற்று நடித்துள்ள சஸ்விகா, சஞ்சனா மூர்த்தி போன்றோர் அருமையாக நடித்துள்ளனர். அதேபோல, அட்டகத்தி தினேஷின் தாய் கதாபாத்திரத்தில் நடித்துள்ள கீதா கைலாசம் சில காட்சிகளில் தோன்றினாலும் சிறப்பாகவே நடித்துள்ளார்.

> **மொத்தத்தில் லப்பர் பந்து நன்றாக ரசித்துச் சிரித்துக் கலகலப்புடன் பார்க்கக்கூடிய ஒரு தரமான பொழுதுபோக்கு திரைப்படம். குறிப்பாக இந்த வருடத்தின் மிகச்சிறந்த திரைப்படங்களில் இதுவும் ஒன்று. திரைப்படத்தைப் பார்த்தபின் அறிமுக இயக்குநர் பச்சமுத்து தமிழ் சினிமாவில் நல்ல இடத்தினை பெறுவார் என்ற எதிர்பார்ப்பு எழுகின்றது. குடும்பமாகத் திரையரங்குகளில் பார்ப்பதற்கு ஒரு சிறந்த திரைப்படம் லப்பர் பந்து**

தினேஷ் குமார் புருஷோத்தமனின் ஒளிப்பதிவு இந்த கதை சொல்லலுக்குப் பெரிய பக்கபலமாக அமைந்துள்ளது. ஷான் ரோல்டன் அவர்களின் இசையில் திரைப்படத்தின் பாடல்கள் யாவும் மிகவும் நன்றாகவே இருந்தது, மற்றும் சில இடங்களில் பின்னணி இசை கூடுதல் சிறப்பாகவும் விளங்கியது.

படத்தின் குறைகள் எனும் போது, பொதுவாக விளையாட்டு சார்ந்த திரைப்படங்கள் என்றாலே வழக்கமான விடயங்கள் இருப்பதுண்டு, அந்தவகையில், அடுத்து என்ன நடக்கும் என்பதைக் கணிக்கக் கூடியதாக இருக்கும் அதனாலோ என்னவோ படத்தின் முதல் பாதி சிறப்பாக இருந்த அளவிற்கு இரண்டாம் பாதியில் சில விடயங்கள் வழமையாகவே இருந்தது. ஆனாலும், இதனைப் பெரிய குறையாகக் கூற முடியாது, ஏனென்றால், இதைப் பொருட்படுத்தாத அளவிற்குப் படம் மிகவும் சிறப்பாகவுள்ளது. இந்த திரைப்படத்தின் கிளைமாக்ஸில் நடக்கும் முக்கியமான விடயம் கதாநாயகன் சாதி பார்த்துப் பழகும் அணியிடம் தோற்றுவிடுவார். காரணம் ஜாலி பாய்ஸ் அணியில் சாதியைப் பார்க்காமல் திறமையைப் பார்த்து அணியினரைத் தேர்ந்தெடுப்பார்கள் என்பதற்காக இப்படி அன்பு செய்கின்றார். இந்தவிடயம் அவ்வளவு பொருத்தமானதாக இல்லை.

மொத்தத்தில் லப்பர் பந்து நன்றாக ரசித்துச் சிரித்துக் கலகலப்புடன் பார்க்கக்கூடிய ஒரு தரமான பொழுதுபோக்கு திரைப்படம். குறிப்பாக இந்த வருடத்தின் மிகச்சிறந்த திரைப்படங்களில் இதுவும் ஒன்று. திரைப்படத்தைப் பார்த்தபின் அறிமுக இயக்குநர் பச்சமுத்து தமிழ் சினிமாவில் நல்ல இடத்தினை பெறுவார் என்ற எதிர்பார்ப்பு எழுகின்றது. குடும்பமாகத் திரையரங்குகளில் பார்ப்பதற்கு ஒரு சிறந்த திரைப்படம் லப்பர் பந்து.





# புனித திரேசாள் ஆலய திருவிழா

யது பாஸ்கரன்

பங்குத்தந்தை அ.சில்வெஸ்ரர் தாஸின் வழிநடத்தலில், உதவி பங்குத்தந்தை றாஜ் டிலகசன் மற்றும் அருட்தந்தை இருதயதாஸ் ஆகியோரின் உதவியோடு, மறைக்கோட்ட முதல்வர் அருட்தந்தை பெனற் மற்றும் கிளி மறைக்கோட்ட அனைத்து குருக்களினாலும் ஐப்பசி முதலாம் நாள் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் A9 வீதியில் புனித திரேசாளின் தேர்ப்பவனி நடைபெற்றது.











# ‘கொங்கை’ எனும் வலிசுமந்த கதை



தருமலிங்கம் லுகிர்தா,
ஊடக கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

**கொங்கை....**

இந்த வார்த்தையைக் கேட்கும்போதே சிலருக்குப் பலவிதமான காட்சிகள் கண்முன் வந்து போகலாம். ஆனால், யார் ஒருவருக்குப் பரிதாபமோ அல்லது வலியோ ஏற்படுகிறதோ அவர்கள் அன்டனூர் சுரா அவர்களின் கொங்கை நூலை வாசித்தவர்களாகத்தான் இருக்கக்கூடும்.

பெண்களை மையப்படுத்திய கதைக்கரு. பெண்களே சக பெண்களைப் பற்றி இந்த அளவு உள்வாங்கி யோசித்திருக்க முடியாது என்று வியக்கும் வகையில் கதாசிரியர் கதைக்கருவுற்று பெண்ணுடல் தரித்து எழுதியுள்ளதாகவே பார்க்க முடிகிறது.

ஒட்டுமொத்தப் பெண்களுடைய வலிகளையும் மார்பகம் பெரிதாக இருக்கும் ஒரு சிறுமியுடனான கதைப் பயணத்தில் ஆசிரியர் நகர்த்துகிறார்.

சில சிறுமிகள் ஆற்றில் குளித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு 9 அல்லது 10 வயதிற்குள் இருக்கலாம். அதில் இருவர் மேல்சட்டை அணியாமல் விளையாடிக் கொண்டும் குளித்துக் கொண்டும் இருந்தனர். அப்போது அங்கிருந்த ஒரு ஆயா, “எலே... சிறுக்கிகளா முலையப் பார்த்தா இன்னும் மூனுமாசத்துல உட்கார்ந்துருவாளுக போலிருக்கு ஒட்டுத்துணி இல்லாம குளிக்கதீங்களா இருங்கலே வாரேன்...” னு சத்தம் போட்டுட்டே அந்தக் குழந்தைகளை வீட்டுக்கு விரட்டி விட்ருச்சு இன்னொரு சமயம் பள்ளிக்கூடத்துல என் மகளை அழைத்துக் கொண்டு வரச் சென்றபோது, ஐந்தாம் வகுப்பு படிக்கும் மாணவியின் தாயாரிடம் தலைமையாசிரியை, “ஏங்க இனிமே இவளுக்கு சிம்மீஸ் போட்டு சட்டை போட்டு அனுப்புங்க விளையாடுனா நெஞ்சு தனியா ஆடுது” என்று கூறிக்கொண்டிருந்தார்கள். சிறிது நாள் கழித்து பேருந்தில் ஒரு கல்லூரி மாணவி ஜீன்ஸ் டீசர்ட் போட்டபடி பயணித்துக் கொண்டிருந்தார். சக பயணிகள் (பெண்கள்) இருவர் அதனைக் கண்டதும் “இவளுகளுக்குத்தான் இருக்குதுனு காட்டறதுக்குத்தான் பஸ்ல வர்றாளுக... மானங்கெட்டவளுங்கனு.. ஜாடையா அந்தப் பெண்ணை கரிச்சுக் கொட்டுனாங்க...


பெண் பிள்ளைகள் வயதுக்கு வந்தவுடன் ஏற்படும் உடல் மாற்றங்களை எப்படி அணுகுவது என்ற விழிப்புணர்வு பெண்களுக்கே இருப்பதில்லை என்பதையும் வயதுக்கு வருவதற்கு தாமதமானால் அந்தப் பெண்ணைக் கண்டு தாயே முகம் சுளித்துக் கொள்வதையும் இவரது படைப்பு சுட்டிக் காட்ட மறக்கவில்லை.

கணவன் தன் மனைவியின் உடல் வசிகரம் குறைந்து விடக்கூடாது என்பதில் குறியாக இருப்பதையும் மனவியை இழந்த கணவனுக்கும் பெண் குழந்தைக்குமான தந்தை மகள் உறவு எப்படியெல்லாம் சிக்கல்களுக்குள்ளாகிறது என்பதையும் இந்தக் கதை முன்னெடுக்கிறது.

கணவன் தன் மனைவி சந்திரவை அழைத்து கொண்டு ஜிம்முக்கு செல்கிறார். இரண்டு குழந்தைகள் பெற்ற 40 வயதான தன் மனைவியின் உடல் எடையைக் குறைத்து, அவளுக்கு அழகு கூட்டுவதற்காக அழைத்துச் செல்கிறார். அவளின் உத்தரவு இல்லாமலே, அவளும் விருப்பம் இல்லாமலே உடற்பயிற்சிகள் மேற்கொள்கிறாள்.

“சிசேரியன் செய்த உடம்பு, எப்படி இது எல்லாம் தாங்கும்” அதுபற்றி கணவனுக்குக் கவலை இல்லை. தன் மனைவி அழகாக இருக்க வேண்டும். எல்லாம் சரி, ஆனால், “மார்பக அளவு மட்டும் குறைந்து விடக்கூடாது” என நினைக்கும் கணவன். இப்படித் தொடங்கும் சந்திரா டீச்சரின் கதை. அவரது மாணவி விமலா தாயை இழந்தவர். அப்பாவின் கவனிப்பில் வளர்கிறாள். அப்பாவும் மறுதிருமணம் செய்யவில்லை. அவளது வீட்டில் பெண்களே இல்லை. 9 வயதிலேயே, பெரியவாளாகி விடுகிறாள். அப்பாவின் கவனிப்பு தான். தன்னுடைய சுக, துக்கங்களைப் பகிர்ந்து கொள்ள வீட்டில் பெண் இல்லையே என்ற கவலை அவளுக்கு. பதினொரு வயதிலேயே அவளின் மார்பகம் அகன்ற தோற்றமாகி விடுகிறது. இதனால் தலை நிமிர்ந்து நடக்க, அச்சப்படுகிறாள். இதனால் பல்வேறு சங்கடங்களுக்கு உள்ளாக்கப்படுகிறாள். தன் பயன்படுத்தும் உள்ளாடைகளைத் தந்தையிடம் வாய் திறந்து கேட்க முடியாத படியும், தன்னுடைய மார்பகத்தின் மீது ஊராரின் பார்வை, சக மாணவிகளின் பார்வை, ஆசிரியர்களின் பார்வை அவளை நரக வேதனைக்குக் கொண்டு செல்கிறது. இளவட்ட பயல்களின் கேளிக்கு ஆளாகிறாள்.

சந்திரா டீச்சரிடம் மனம் விட்டுப் பேசுகிறாள். அவரின் மூலம் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டு சிகிச்சை செய்ய முற்படுகிறாள். பிறகு அவரின் மூலம் ஜிம்மிற்கு செல்கிறாள். அங்கே அகண்ட மார்பகத்தைப் பார்த்து, “தன் கம்பெனி உள்ளாடைக்கு மொடலாக வரியா அப்படின்னு” கேட்கிறார்கள். கூனி குறுகி அழுகிறாய். “11 வயதில் இப்படிப்பட்ட நிலைமை தனக்கு வேண்டாம்” என நினைத்து ஆயிஷா நடராஜன் எழுதிய ‘ஆயிஷா’ என்ற கதையில் வருவது போல், தனக்கு வலி தெரியாமல் இருப்பதற்காக ‘நைட்ரஸ் எத்தனால்’ கரைசலை கொண்டு தன் மார்பகத்தில் செலுத்தி, மார்பகத்தை அறுக்கும் போது வலி தெரியாமல் இருக்கப் பயன்படுத்துகிறாள். தனது மார்பகத்தை வெட்டி விடுகிறாள். தன் செல்ல மகளின் மார்பகம் வெட்டி இருந்ததைப் பார்த்து அலறியடித்து தூக்கிச் செல்கிறார் தந்தை. வெட்டப்பட்ட மார்பகத்தில் ரத்தம் வடிகிறது. தன் மார்பை ரசித்தவருக்கும், கேலி செய்த இந்த ஊராரிடம் தன் வெட்டிய மார்பை காண்பிக்கிறாள்.




இப்படியாக ஒட்டுமொத்தப் பெண்களுடைய வலிகளையும், மார்பகம் பெரிதாக இருக்கும் விமலாவின் கதைப்பயணத்தில் ஆசிரியர் எடுத்துரைக்கின்றார். நாவலை வாசித்து முடிக்கையில், சிலருக்கு பல கேள்விகள் எழலாம். சிலருக்கு படபடப்பு வரலாம். பலருக்கு கிளுகிளுப்பும் வரலாம். ஆனால், எனக்கு கதையை இன்னொரு முறை வாசிக்க தூண்டியது. பல கேள்வியும் மனதில் எழுந்தது.

ஒரு பெண்ணின் மார்பகத்தை பற்றிய வலியை உணரும் பெண்களே! அதை விமர்சிப்பதும், வசைபாடுவதும் இன்னும் பெண்களைக் கூனிக்குறுக வைக்கிறது.

பெண் குழந்தைகள் வயதுக்கு வந்தவுடன் ஏற்படும் உடல் மாற்றங்களை எப்படி அணுகுவது என்ற விழிப்புணர்வு பெண்களுக்கே இருப்பதில்லை. அவர்கள் வயதுக்கு வருவதற்கு தாமதமானால் அந்தப் பெண்ணைக் கண்டு அம்மாவே முகம்சுளித்துக் கொள்வதையும் இதில் கூறியிருக்கிறார்.

தாய் வழிச் சமூகம் தந்தை வழி சமூகமாய் மாறும்போது பெண்ணுடல் ஆண்களின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டு, உடல் காமத்திற்கான பண்டமாக மாறியதென அணிந்துரையில் கவிதா முரளிதரன் கூறியிருப்பார். பெண் வாசகர்களிடம் நன்மதிப்பை இழக்கலாம், ஆபாசமெனத் தூற்றலாம், சிலர் தன்னை சந்தேகக் கண்களால் பார்க்கலாம். உண்மைக்கு அருகிலிருந்து இக்கதை எழுதியதால் இவற்றில் ஏதேனும் ஒன்று நடக்கும் என்று ஆசிரியர் ‘கொங்கை’ நாவலின் தன்னுரையில் எழுதியிருப்பார்.

> **ஒட்டுமொத்தப் பெண்களுடைய வலிகளையும், மார்பகம் பெரிதாக இருக்கும் விமலாவின் கதைப்பயணத்தில் ஆசிரியர் எடுத்துரைக்கின்றார். நாவலை வாசித்து முடிக்கையில், சிலருக்கு பல கேள்விகள் எழலாம். சிலருக்கு படபடப்பு வரலாம். பலருக்கு கிளுகிளுப்பும் வரலாம். ஆனால், எனக்கு கதையை இன்னொரு முறை வாசிக்க தூண்டியது. பல கேள்வியும் மனதில் எழுந்தது**

எழுத்தாளர் என்றால் சுவாரசியமான நாவலைத் தருவது அல்லது சமூகத்திற்கு ஒவ்வாத கற்பனைப் படைப்பைத் தந்திடாது சமூகத்தில் சரியாக நிரம்பிடாத இடத்தை நிரப்பிட முயற்சி செய்திருக்கிறார். ஆசிரியர் அந்தச் சிறிய முயற்சியில் பெரிய விதையை விதைத்து இருக்கிறார். இன்று பெண்கள் எல்லாத் துறையிலும் தடம் பதித்து விட்டார்கள் என்பதில் மாற்று கருத்தில்லை. அப்படியென்றால் இந்தப் புத்தகம் எதற்கு? சிந்தியுங்கள்.

பெண் என்பவள் எப்போதும் பெரும் சக்தி தான். கிளியோபாட்ரோ போன்ற அரசியல்வாதியை இன்று வரை பார்த்திட முடியாத அளவுக்கு, அப்படியொரு அரசியலை சுமார் 2300 வருடங்களுக்கு முன்பே நடத்தியிருக்கிறார். இராஜராஜனுக்கு ஒரு பஞ்சமாதேவி என்று பட்டியல் நீண்டு கொண்டே தான் இருந்திருக்கிறது.

இந்தப் புத்தகத்தின் வெற்றியாக பார்ப்பது எழுத்து நடையே. யாருடைய வாழ்வியலாக இருந்தாலும், எதை சொல்ல வேண்டும் என்பதை உணர்ந்து எழுதியிருப்பதும், ஆங்காங்கே இன்றைய நிகழ்வோடு பொருத்தி எழுதியிருக்கும் எழுத்து, வாசிப்பை சுவாரசியப்படுத்தி இருக்கிறது. ஆளுமைகளின் தேர்வும் அப்படி. ஒன்றிரண்டு பேர் மட்டுமே நமக்கு பரிட்சயம்.

மார்பகத்தைப் பெரிதாக்கும் விளம்பரம் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும்போது, நான்காவது படிக்கும்போது, பூப்பெய்து தற்போது ஆறாவது பயிலும் மாணவி விமலாவையும், ஆசிரியர் சந்திராவையும் அவரின் இருமகள்களான சுஜி, விஜியையும் அறிமுகப்படுத்தி கதையை நகர்த்தியுள்ளார் ஆசிரியர்.

மனைவியை இழந்து மறுமணம் செய்யாமல், பூப்பெய்தபோது நம் வழக்கம் அத்தை முறையானவள் தான் பார்ப்பாள், விமலா விசயத்தில் இங்கு அப்பா தான் பார்க்கிறார். விமலாவிடம் எப்படியெல்லாம் அப்பா நடந்து கொள்கிறார் என்பதை சந்திரா தெரிந்து கொள்ளும்போது தாயுமானவராக உயர்ந்து நிற்கிறார்.

40 வயதைத் தாண்டிய சந்திராவின் தொப்பையை, இடுப்புக்கு மேல் மடிப்பு விழுவதை மற்றவர்கள் பார்வைக்காக குறைக்க முயற்சிக்கும் பொருட்டு உடற்பயிற்சி கற்றுத் தருபவளிடம் என் மனைவியின் கொழுப்பினை குறைக்க பயிற்சியளியுங்கள் மார்பகத்தை மட்டும் குறைக்காமல் பார்த்துக் கொள்ளுங்களென்பான். சந்திரா அதைக் கேட்டும் கேட்காதவளாய் கடந்து போவதை இன்றுவரை பெண்களின் நிலை இப்படித்தான் உள்ளதெனக் காட்டியிருப்பார்.

பால்வடி மருந்து ஊசியினால் சுரக்கும் பாலைக் குடித்து வந்த என் முலைக்காம்புகள்போல பாலை வடிய விட்டுக் கொண்டிருக்கும் ஊசி போடப்பட்ட மாடுகளின் காம்புகளை தனியார் பால்பண்ணையில் அப்பாவுடன் சென்று பார்த்ததாக ஆசிரியர் சந்திராவிடம் விமலா கூறும்போதுதான், தான் பள்ளிக்கு வரும்போது, மார்பகத்தை அருகில் வந்து தினமும் பார்த்து கேலி பேசுபவனோடு இட்டுக்கட்டி தெருமக்கள் இணைத்துப் பேசியதை அப்பா தவறாகப் புரிந்து அவள் மனதை ரணமாக்கியதையும் அதன் விளைவோ தன் பெருத்த மார்பகத்தின் மேல் வெறுப்பை உருவாக்கியதாகவும் காட்டியுள்ளார்.

> **கொங்கை நாவல் ஒவ்வொரு விட்டிலுள்ளவர்களும் வாசித்து புத்தக அலமாரியில் அடுக்கி வைத்தார்களெனில், மார்பகம் பற்றிய வலி குறைந்து, மன வலிமை பெருகும் பெண்களுக்கும் ஆண்களிடத்திலும் புரிதலையும் மாற்றத்தையும் ஏற்படுத்தும். மொத்தத்தில் பெண்களின் உடல் உறுப்புகளைப் பற்றிய ஒரு புரிதல் என்பது இருபாலருக்கும் வரவேண்டும்**

மார்பகப் பிரச்சினையில் உழன்றவளிடம் ஈழத்தில் தமிழச்சிகளைக் கைது செய்து மார்பகங்களைச் சிங்களவர்கள் அறுத்தனரென்பதையும், திருவிதாங்கூர் மன்னரிடம் முலை வரி கட்ட முடியாதெனக் கூறி முலையை அறுத்து நாஞ்செலி கொடுத்ததாகவும், நாமும் இப்ப முலைவரி மறைமுகமாக பிராவிற்கு ஜி.எஸ். டியாக கட்டுவதாகவும் சந்திரா கூறுவதாக நேர்த்தியாக நாவலில் சொருகியதோடு தஞ்சையில் பண்ணையாரிடம் சேரிப்பெண்கள் தன் மகளின் மார்பகத்தைக் காண்பித்தபின் மேல்சட்டை அணிய அனுமதிப்பர் முன்பெல்லாமென்பதை அறியாதவர்களுக்குத் தெரியப்படுத்தியுள்ளார்.

மார்பகத்தைக் குறைக்க ஏதேனும் வழியுண்டா என சந்திராவுடன் அழகுக்கலை நிபுணரிடம் ஆலோசனை கேட்க வந்த விமலா, குட்டி ரேவதி எழுதிய முலைகள் புத்தகத்தை அங்கு வாசிப்பதைக் கண்டு கடந்து செல்லும் பெண்களின் கேலிப்பேச்சும், மார்பகத்தைப் பெரிதாகக் காண்பிக்கத் துடிக்கும் சிலரையும் ஒரே இடத்தில் சந்திக்கவும் நமை சிந்திக்கவும் வைத்திருப்பார்.

பால்நிலையின் வெளிப்பாடாகவே நூலின் முகப்பு பக்கத்தை நான் பார்க்கிறேன். பெண் என்பவள் புதியதொரு உயிரைப் படைத்து உலகிற்குத் தருபவள். அவளது மனவலிமையோ அளப்பரியது. உலகின், சமூகத்தின், ஆணாதிக்க வெளியற்களின் தங்கு தடையில்லாத ஒடுக்குமுறைகளை அனுதினமும் சந்திப்பவள். அவளை அடையாளப்படுத்தும் மார்பகங்களோ இவர்களால் பலவிதமாக நோக்கப்படும்போது ஒரு பெண்ணாக அவளது மன உணர்வுகளை வடித்தெடுக்க வார்த்தைகளே இல்லை என்பதைப் பொய்யாக்கி இருக்கிறார்.

கொங்கை நாவல் ஒவ்வொரு விட்டிலுள்ளவர்களும் வாசித்து புத்தக அலமாரியில் அடுக்கி வைத்தார்களெனில், மார்பகம் பற்றிய வலி குறைந்து மன வலிமை பெருகும் பெண்களுக்கும் ஆண்களிடத்திலும் புரிதலையும் மாற்றத்தையும் ஏற்படுத்தும். மொத்தத்தில் பெண்களின் உடல் உறுப்புகளைப் பற்றிய ஒரு புரிதல் என்பது இருபாலருக்கும் வரவேண்டும், சக பெண்களைப் பெண்களும், பெண்களை ஆண்களும் உடல் ரீதியாக விமர்சிப்பதையோ உதாசீனப்படுத்துவதையோ தவிர்த்து உடலுறுப்புகள் அந்தரங்கத்திற்கு மட்டுமல்ல, என்பதை உணரவேண்டும் அப்படி ஒரு புரிதல் கொங்கை நாவலைப் படிப்பவர்களுக்கு வரும் என்பதில் ஐயமில்லை.

நடராஜன் எழுதிய ஆயிஷா என்கிற கதையைத் தெரிந்துகொண்டு அவளுள் மாற்றத்தைக் கொண்டு வராமல் எதிர்வினைக்குக் கொண்டு சென்றது இச்சமூகமே என முடித்திருப்பார் ஆசிரியர் சுரா.

சிங்கப்பூர்

### பரிசுபெற்ற முன்னாள்

# அமைச்சருக்கு சிறைத் தண்டனை

சிங்கப்பூர் முன்னாள் அமைச்சர் ஈஸ்வரனுக்கு 12 மாதங்கள் சிறைத் தண்டனை விதித்து அந்நாட்டு உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

கடந்த 1962ஆம் ஆண்டு சென்னையில் பிறந்தவர் ஈஸ்வரன். சிறுவயதிலேயே சிங்கப்பூரில் குடியேறிய இவர், 1997ஆம் ஆண்டு அந்த நாட்டு எம்.பி.,யாக தேர்வு செய்யப்பட்டார்.

2006இல் லீ ஹெய்ன் லூங்கின் அமைச்சரவையில் இடம்பெற்றார். வர்த்தக உறவுகளுக்கான அமைச்சராகவும், போக்குவரத்துத்துறை அமைச்சராகவும் பதவி வகித்து வந்த இவர், தொழிலதிபர்களிடம் இருந்து, 4,00,000 சிங்கப்பூர் டொலர் மதிப்புள்ள பரிசுப் பொருட்களை பெற்றதாகக் குற்றச்சாட்டு எழுந்தது.

இது தொடர்பாக வழக்குப்பதிவு செய்யப்பட்டு, விசாரணை நடைபெற்று வந்த நிலையில், தன் மீதான 35 குற்றச்சாட்டுகளில் 5இல் அவர் குற்றத்தை ஒப்புக் கொண்டார். கடுமையான ஊழல் குற்றச்சாட்டுக்கள் விலக்கப்பட்ட நிலையில், பரிசு



பொருட்களை பெற்றுக் கொண்ட குற்றச்சாட்டில் மட்டும் அவர் குற்றவாளி என்று நீதிமன்றம் உறுதி செய்தது.

இதையடுத்து, முன்னாள் அமைச்சர் ஈஸ்வரனுக்கு 12 மாத சிறைத் தண்டனை விதித்து அந்நாட்டு உயர்நீதிமன்றம் வியாழக்கிழமை (03) தீர்ப்பளித்துள்ளது.




வொஷிங்டன்

### ஈரானுக்கு

## ஜி7 நாடுகள் கண்டனம்

இஸ்ரேல் மீது ஈரான் நடத்திய ஏவுகணை தாக்குதலுக்கு ஜி7 நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

இது குறித்து அமெரிக்க ஜனாதிபதி மாளிகை சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில்,

"இஸ்ரேலுக்கு எதிராக ஈரான் நடத்தியுள்ள தாக்குதலுக்கு ஜனாதிபதி ஜோ பைடன் மற்றும் ஜி7 நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

ஈரானுக்கு எதிராக புதிய தடைகள் விதிக்கவும் அமெரிக்கா, பிரிட்டன், கனடா, பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, ஜப்பான் ஆகிய நாடுகளின் (ஜி7) தலைவர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

இஸ்ரேலுக்கும் அதன் குடிமக்களுக்கும் அமெரிக்காவின் ஆதரவை ஜோ பைடன் தெரிவித்துள்ளார்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



டோக்கியோ

### 2ஆம் உலகப் போரில் புதைக்கப்பட்ட வெடிகுண்டு

## ஜப்பானில் வெடித்தது

ஜப்பானில், மியாசாகி விமான நிலையத்தில், இரண்டாம் உலகப் போரின் போது, புதைக்கப்பட்டிருந்த அமெரிக்க வெடிகுண்டு ஒன்று, கடந்த இரண்டாம் திகதி திடீரென வெடித்ததில், ஓடுபாதையில் பள்ளம் ஏற்பட்டது.

கிழக்கு ஆசிய நாடான ஜப்பானில், தென் மேற்கு பகுதியில் மியாசாகி விமான நிலையம் உள்ளது. 1943இல், இரண்டாம் உலகப் போரின் போது, ஜப்பான் கடற்படை தளமாக இந்த விமான நிலையம் திறக்கப்பட்டது.

மேலும், இரண்டாம் உலகப் போரின் போது வீசப்பட்ட நூற்றுக்கணக்கான டன் வெடிகுண்டுகள், ஜப்பானை சுற்றி புதைந்து கிடக்கின்றன. சில சமயங்களில், கட்டுமானப் பணிகளின் போது வெடிகுண்டுகள் கண்டெடுக்கப்படுகின்றன.

இதற்கிடையே, அமெரிக்க இராணுவம் வீசிய வெடிக்காத குண்டுகள், மியாசாகி விமான நிலையம் அமைந்துள்ள பகுதியில் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்நிலையில், இதுபோன்ற ஒரு வெடிகுண்டு, நேற்று முன்தினம் திடீரென வெடித்ததில், ஓடுபாதையில் பள்ளம் ஏற்பட்டது.

இது குறித்து விமான நிலைய அதிகாரிகள் கூறுகையில்,

'500 பவுண்டுகள் எடையுள்ள அமெரிக்க வெடிகுண்டு திடீரென வெடித்தது. இருப்பினும் அப்போ, அருகில் எந்த விமானங்களும் இல்லை. மேலும், யாருக்கும் எந்த காயமும் ஏற்படவில்லை. இந்த சம்பவத்தால், 80க்கும் மேற்பட்ட விமானங்கள் இரத்து செய்யப்பட்டன" என்றனர்.

புதுடெல்லி

## மருத்துவர் சுட்டுக் கொலை

மருத்துவமனைக்குள் புகுந்த மர்ம நபர்கள், அங்கு பணியிலிருந்த மருத்துவரைச் சுட்டுக் கொன்ற சம்பவம் புதுடெல்லியில் இடம்பெற்றுள்ளது.

புதுடெல்லி-ஜெய்த்பூரிலுள்ள நீமா மருத்துவமனைக்குக் கடந்த 3ஆம் திகதி, விபத்து ஏற்பட்டதாகக் கூறி சிகிச்சைக்காக சென்ற இருவர், மருத்துவரைச் சந்திக்க வேண்டும் என கூறியதைத் தொடர்ந்து, ஊழியர்கள் மருத்துவரின் அறைக்கு அனுப்பி வைத்துள்ளனர். இதையடுத்து, மருத்துவர் அறைக்குள் நுழைந்தவுடன் அவரை துப்பாக்கியால் சுட்டுக் கொன்றுவிட்டு இருவரும் தப்பி ஓடியதாக மருத்துவமனை ஊழியர்கள் தெரிவித்துள்ளனர். இச்சம்பவத்தில் தொடர்புடைய குற்றவாளிகளை பொலிஸார் தேடி வருகின்றனர்.

சென்னை

### அமைச்சரின் பேச்சுக்கு

## சமந்தா காட்டமான பதில்



நாக சைதன்யாவுடனான விவாகரத்து குறித்து கருத்து தெரிவித்த காங்கிரஸ் அமைச்சரின் பேச்சுக்கு, நடிகை சமந்தா காட்டமாக பதிலளித்துள்ளார்.

நடிகை சமந்தா, சினிமாவில் தன்னுடன் இணைந்து நடித்த நாக சைதன்யாவை காதலித்து, திருமணம் செய்து கொண்டார். பின்னர், இருவரிடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக 2021இல் விவாகரத்து பெற்றனர்.

இதனிடையே, சமந்தா - நாக சைதன்யா விவாகரத்துக்கு முன்னாள் அமைச்சர் கே.டி.ராமராவ் தான் காரணம் என்று தெலுங்கானா காங்கிரஸ் அமைச்சர் கொண்டா சுரேகா சர்ச்சைக்குறிய குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

இந்நிலையில், இந்த விவகாரம் தொடர்பாக சமந்தா கடும் கோபத்துடன் அறிக்கை வெளியிட்டுள்ளார். அதில், "பல சிரமங்களை கடந்து ஒரு பெண்ணாக போராடிக் கொண்டிருக்கிறேன். அமைச்சர் கோண்டா சுரேகாவின் கருத்துக்கு நான் கடும் கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறேன்" என்றார்.

இம்பால்

### மணிப்பூரில்

## மீண்டும் மோதல்




மணிப்பூரில் நாகா சமூகத்தினரிடையே புதன்கிழமை (02) வெடித்த மோதலின் போது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் மூன்று பேர் பலியாகினர்.

வடகிழக்கு மாநிலமான மணிப்பூரில் முதல்வர் பைரேன் சிங் தலைமையில் பா.ஜ.க. ஆட்சி அமைந்துள்ளது. இங்கு, கடந்த ஆண்டு மே மாதம் கூகி - மெய்டி பழங்குடியின சமூகத்தினரிடையே மோதல் ஏற்பட்டது. இது வன்முறையாக மாறி, 10 மாதங்களுக்கு மேலாக நீடித்தது.

இதில், 200க்கும் மேற்பட்டோர் பலியாகினர். மத்திய, மாநில அரசுகளின் தீவிர நடவடிக்கையால் வன்முறை சம்பவங்கள் படிப்படியாக குறைந்தன. இருப்பினும், அங்குள்ள ஆயுதமேந்திய போராளிக் குழுவினர் அவ்வப்போது வன்முறை சம்பவங்களை நிகழ்த்தி வருகின்றனர்.

இந்நிலையில், இங்குள்ள உக்ருல் மாவட்டத்தில் காந்தி ஜெயந்தியை முன்னிட்டு தூய்மை பணி மேற்கொள்ளப்பட்டது. உக்ருல் நகரின் மைய பகுதியில் நாகா சமூகத்தினர் இந்தப் பணியில் ஈடுபட்டிருந்த போது, இரு பிரிவினரிடையே சுத்தம் செய்வது தொடர்பாக தகராறு ஏற்பட்டுள்ளது.

இது கைகலப்பாக மாறியதில், அங்கிருந்தவர்கள் ஒருவரையொருவர் தாக்கிக் கொண்டனர். அங்கிருந்தவர்களில் சிலர், தங்களிடம் இருந்த துப்பாக்கியால் மாறி மாறி சுட்டுக் கொண்டனர்.

இதில், மூன்று பேர் பலியாகிய நிலையில், ஐந்து பேர் காயமடைந்தனர். இதையடுத்து, சம்பவ இடத்தில் பாதுகாப்பு படையினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

இதைத் தொடர்ந்து, உக்ருல் நகரில் செவ்வாய்க்கிழமை (01) காலை 9.30 மணி முதல் காலவரையின்றி ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

### சம்பியன்ஸ் லீக்:

# வில்லியிடம் தோற்ற றியல் மட்ரிட்

## மியூனிச்சை வென்ற வில்லா



ஐரோப்பிய கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான சம்பியன்ஸ் லீக் தொடரில், பிரெஞ்சு லீக் 1 கழகமான லில்லியின் மைதானத்தில் வியாழக்கிழமை (03) நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 0-1 என்ற கோல் கணக்கில் நடப்புச் சம்பியன்களான றியல் மட்ரிட் தோற்றது.

லில்லி சார்பாகப் பெறப்பட்ட கோலை ஜொனதன் டேவிட் பெற்றிருந்தார்.


இதேவேளை, தமது மைதானத்தில் நடைபெற்ற ஜேர்மனிய புண்டெலிஸ்கா கழகமான பயேர்ண் மியூனிச்சுடனான போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான அஸ்தன் வில்லா வென்றது. வில்லா சார்பாகப் பெறப்பட்ட கோலை ஜோன் டுரான் பெற்றிருந்தார்.

இந்நிலையில், போர்த்துக்கல் கழகமான பெய்பிக்காவின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 0-4 என்ற கோல் கணக்கில் ஸ்பானிய லா லிகா கழகமான அத்லெட்டிகோ மட்ரிட் தோற்றது.

இதேவேளை ஜேர்மனியக் கழகமான ஆர். பி லெய்ப்ஸிக்கின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 3-2 என்ற கோல் கணக்கில் இத்தாலிய சீரி ஏ கழகமான ஜுவென்டஸ் வென்றது.

### முதலாவது போட்டியில்

## அயர்லாந்தை வீழ்த்திய தென்னாபிரிக்கா




அயர்லாந்துக்கெதிரான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரில், ஐக்கிய அரபு அமீரகத்தின் அபுதாபியில் புதன்கிழமை (02) நடைபெற்ற முதலாவது போட்டியில் தென்னாபிரிக்கா வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: தென்னாபிரிக்கா

தென்னாபிரிக்கா: 271/9 (50 ஓவ. ) (துடுப்பாட்டம்: றயான் றிக்கெல்டன் 91 (102), ட்ரிஸ்டன் ஸ்டப்ஸ் 79 (86), பிஜோன் போர்ச்சுன் 28 (34), லுங்கி என்கிடி ஆ.இ 20 (17) ஓட்டங்கள். பந்துவீச்சு: மார்க் அடைர் 4/50, கிறேய்க் யங்க் 3/45, கிரஹாம் ஹுமெ 1/42, அன்டி மக்பிறைன் 1/46)

அயர்லாந்து: 132/10 (31.5 ஓவ.) (பந்துவீச்சு: லிஸாட் வில்லியம்ஸ் 4/32, பிஜோன் போர்ச்சுன் 2/28, லுங்கி என்கிடி 2/35, வியான் முல்டர் 1/11, ஒட்னெய்ல் பார்ட்மன் 1/24)

போட்டியின் நாயகன்: றயான் றிகெல்டன்

இரண்டு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது போட்டியானது இன்று மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது.

## பிரவீனுக்கு ஓராண்டுத் தடை



அனைத்து வகையான கிரிக்கெட்டிலிருந்தும் ஓராண்டுக்கு இலங்கையின் சுழற்பந்துவீச்சாளர் பிரவீன் ஜெயவிக்கிரமவுக்கு சர்வதேச கிரிக்கெட் சபை தடை விதித்துள்ளது. இந்த ஓராண்டில் இறுதி ஆறு மாதங்கள் ஒத்தி வைக்கப்பட்டதாகும்.

கிரிக்கெட் சபையின் மோசடிக்கெதிரான கோவையை மீறியதை ஜெயவிக்கிரம ஒப்புக் கொண்டமையையடுத்தே இத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

இத்தடையானது சர்வதேச கிரிக்கெட், இலங்கையின் உள்ளூர் இருபதுக்கு-20 தொடரான லங்கா பிறீமியர் லீக்குடன் தொடர்புபட்டதாகும்.

### கராத்தே தைக்குவாண்டோ போட்டியில்

## மாணவி அனந்தினி மூன்றாமிடம்



தேசிய மட்டத்தில் இரத்தினபுரியில் அண்மையில் நடைபெற்ற ஆகக்கூடிய எடையான (73 கிலோ கிராமுக்கு மேல்) 18 -20 வயதுப் பிரிவின் கீழ், கராத்தே தைக்குவாண்டோ எனும் காலால் மட்டும் தாக்கும் விளையாட்டில் மட்டக்களப்பு வின்சன்ட் உயர்தர பெண்கள் பாடசாலையின் மாணவி சரவணன் அனந்தினி இந்த போட்டியில் பாடசாலை வரலாற்றில் முதல் தடவை பங்குபற்றி மூன்றாமிடத்தைப் பெற்றுள்ளார்.

அனந்தினி, மட்டக்களப்பு எஸ்.கே.ஓ. கராத்தே கழகத்தைச் சேர்ந்த பயிற்றுவிப்பாளர்களான கே.ரி. பிரகாஸ், க.குகதாசன், வி. விமல்ராஜ், கணேசலிங்கம் ஆகியோரின் மாணவியான இவரை பாடசாலை சமூகம் செவ்வாய்க்கிழமை (01) நினைவுக் கேடயம் வழங்கி கௌரவித்தது குறிப்பிடத்தக்கது.

### மல்யுத்தத்தில்

## முகம்மது அர்கம் முதலாமிடம்

எம்.யூ.எம்.சனூன்



அகில இலங்கை பாடசாலைகளுக்கு மத்தியிலான மல்யுத்தமானது கண்டி திகன உள்ளக விளையாட்டரங்கில் அண்மையில் நடைபெற்றபோது நுரைச்சோலை முஸ்லிம் மகா வித்தியாலய மாணவன் முகம்மது சியாம் முகம்மது அர்கம் 71 கிலோ கிராம் எடைப்பிரிவில் முதலாமிடம் பெற்றுள்ளார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்டினால் வெள்ளிக்கழமை 04, ஒக்டோபர் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.